# தாரகை

ஆகஸ்ட் - 1982

ஏழாலை ... மன்றம்
ERLALAI M...
ஏழாலை மேற்கு ... ERLALAI WEST
சுன்னாகம் CHUNNAKAM



- அன்புமணி பார்வையில் நெருப்பு மல்லிகை
- நியாயமான போராட்டங்கள்
- ஒரு சலனம் ஒரு மரணம்.

ரூபா 2/50.

## "ஹோம் நீட்ஸ்"

நகரெங்கும இதே பேச்சு

மட்டுநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள

விற்பனை நிலையம்

★ யானைமார்க் குளிரூட்டப்பட்ட உணவு வகைகள்

★ பாக்கட் உணவு வகைகள்

★ டின் உணவு வகைகள்

★ பால்சபைத் தயாரிப்புகள்

★ கோர்டியல்ஸ், கூல் ட்ரிங்ஸ்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

## "ஹோம் நீட்ஸ்"

153, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

★

உங்கள் வெளியூர் நண்பர்கள்
சௌகரியமாகத் தங்கி நின்று
இனிய நினைவுகளை எடுத்துச்செல்ல
உகந்த உல்லாச விடுதி

## "ரவீந்திரன் இன்"

153, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

உரிமையாளர் : க. ரவீந்திரன்.

# ஓவியச் செல்வன் கிரிதரன்


இரண்டு வயதில் வரைய ஆரம்பித்த செல்வன் கிரிதரனின் முதலாவது தனிநபர் ஓவியக் கண்காட்சி 1980 ஆகஸ்ட் 22, 23, 24 ஆகிய மூன்று தினங்கள் கொழும்பில் பிர சித்திபெற்ற லயனல் வெண்ட் மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது அவருக்கு வயது 16.

இக்கண்காட்சியில் 95 ஓவியங்கள் இடம் பெற்றன. இவற்றில் பலவற்றை பொதுமக்கள் பெரும் விலைகொடுத்து வாங்கிச்சென்றுள் ளனர். இதில் இடம்பெற்ற 'வறுமையும் செல் வமும்' என்ற தலைப்பிலமைந்த தற்கால பாணி ஓவியத்தை பிரபல ஓவியர் சேனகா சேன நாயக்கா பெரிதும் பாராட்டினர். சேனகா சேனநாயக்காவும் முன்பு இவரைப்போலவே சிறுவயதில் ஓவியத்திறமையை வெளிப்படுத் தியவர். தற்போது வெளிநாடுகளில் பெரும் புகழ் பெற்றவர்.

இக்கண்காட்சி முடிந்த கையோடு 1980 செப்டம்பர் 18 முதல் ஒக்டோபர் 2 வரை பல்கரியாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு இலங்கை அரசாங்கம் இவரை அனுப்பிவைத் தது.

பல்கேரியா நாட்டில் இவரது ஓவியத் திறமை மிகவும் பாராட்டப்பட்டது. அதற்கு அறிகுறியாக மீண்டும் ஒரு முறை பல்கேரிய அரசாங்கமே ''பானர் ஒவ் பீஸ்'' என்ற ஓவியக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக இவரை அழைத்தது. இக்காட்சியில் கிரிதர னின் ஐந்து ஓவியங்கள் இடம்பெற்றன. 1981ம் ஆண்டு 13ம் திகதி முதல் 27ம் திகதிவரை இவர் பல்கேரியாவில் இருந்தார். சிறுவனாக இருந்த போதும் இவருக்கு V. I. P. உப சரணை அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்விஜயத்தின்போது பல்கேரியப் பத்திரிகை களிலும் டெலிவிஷனிலும் இவர் பேட்டிகள் வெளிவந்தன.

1981 ஜனவரியில் மதுரையில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஓவியக் காட்சியில் கிரிதரனின் ஓவியங்கள் பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றன. மாநாடு முடிந்த பின்னரும் சுமார் மூன்று மாதங்கள் வரை அதாவது ஏப்ரல் 27 வரை இக்கண்காட்சி நீடித்தது என்பது குறிப் பிடத்தக்கது.



யாரிடமும் பயிற்சி பெறுமல், எந்தக் கல்லூரியிலும் சேராமல் இத்தனை ஓவியத் திறமையைக் கொண்டிருந்தபோதும், கிரிதர தரன் ஒரு பிரபல ஓவியரை மானசீகக் குரு வாகக் கொண்டு அவர்பாணியில் ஓவியம் வரைவதில் பெருவிருப்புக் கொண்டிருக்கிறர். அவர்தான் கோயில்கள் சிற்பங்கள் வரைவதில் தனிப்பாணியை வகித்துக்கொண்டு உலகப் புகழ்பெற்ற தமிழக ஓவியர் 'சில்பி' அவர் கள். ஓவியமேதை கிரிதரனுக்கு உரிய கௌர வம் கிடைக்குமா?

— மணி.

அட்டைப்படக் கட்டுரை

கலை இலக்கிய வளர்ச்சிக்கு

''தாரகை''

பண முதலீட்டு வளர்ச்சிக்கு

# "த பிறைன்ஸ்"

TFC

## த பிறைன்ஸ் கொம்பனி லிமிட்டட்

இல. 19, மத்திய வீதி,

மட்டக்களப்பு.

தொலைபேசி: 065-2896.

# இதய அஞ்சல்

'புதுக்கவிதை — ஒரு நோக்கு' என்ற தலைப்பில், கண்டபடி புதுக்கவிதை வடிக்கும் கவிஞர்கள் பற்றி நல்லதொரு விமர்சனம் அளித்திருக்கிறார் வடகோவை வரதராஜன். மரபை மீறி, எதுகை - மோனை - ஓசைநயமின்றி கவி வடிப்போர் இதுபற்றி ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

சரசாலை. செல்வி கங்கா மங்கை.

✤ ✤ ✤

புதியதொரு சத்திய வேட்கையுடன், தமிழ் இலக்கியவானில் மீண்டும் ஒளிவிட வந்த 'தாரகை' மூன்றும் இதழ் நம்பிக்கையான எதிர்காலத்தை உறுதிப்படுத்துகிறது.

புதுக் கவிதையினை நோக்கிய வடகோவை யாருக்கு என்ன தகுதியிருக்கிறது? ('ஒரு நல்ல சிறுகதையேனும் எழுதாதவருக்கு சிறுகதையை விமர்சிக்க தகுதியில்லை' என்ற ஆங்கில அறிஞனின் வாக்கு, புதுக்கவிதை விமர்சகருக்கும் பொருந்துமல்லவா?) புதுக் கவிதையும் ஒரு இலக்கிய வடிவமே - கவிதை ஊடகமே - என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு பல வருடமாகிறது. இப்போது அதன் வளர்ச்சியைப் பற்றியே ஆராயவேண்டும். 'இவர்களும் எழுத்தாளர்களாகி விட்டார்களே' என்று காய்வதில் அர்த்தமில்லை.

'புதுக் கவிதை' என்று ஒப்புக்கொள்ளப்பட்டதை, 'கவிதையா?' என்று மீண்டும் வினவுவது வேடிக்கையாயுள்ளது.

பள்ளக்கெட்டுவ. ஸ்ரீ தேவிப்ரியா

✤ ✤ ✤

'தாரகை' என்றுந் தளராது நின்று
தளிர் விட்டுத் தழைத்து வர
எங்கள் ஆதரவு என்றென்றும்
மங்கள மாயமையும் இது உறுதி!

கெ. தர்மகுலராசா, ஜெகரூபன்,
நிலாவெளி - 2. சாந்தரூபி, செல்வம்.

✤ ✤ ✤

எப்பொருள் விலையாக வேண்டுமோ, அப்பொருளுக்கு வெளிக்கவர்ச்சி அவசியம். தாரகையில் இது இல்லையே! பூங்கா, ஒரே பார்வையில் போன்ற அம்சங்கள் இடம்பெறுவது என் போன்றவர்களுக்கு ஏமாற்றமே. செல்வி பரமா சண்முகம், தாழை செல்வநாயகம், வடகோவை வரதராஜன் ஆகியோரின் ஆக்கங்கள் அருமை. சமுதாய முன்னேற்றத்துக்கு சத்தான கருத்துக்கள் வரவேற்கப்பட வேண்டும்.

ஸ்பிரிங்வெளி. எஸ். கே. ராஜரெத்தினம்.

✤ ✤ ✤

இன்று புற்றீசல் போன்று இலக்கிய சஞ்சிகைகள் வெளியாகின்றன. ஆனல், விட்டில் பூச்சிகள் போன்று திடீரென்று மறைந்து விடுகின்றன. அந்த வகையில் 'தாரகை'யும் ஆகி விடக் கூடாதென வேண்டி, தாரகையின் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

க. முத்துலிங்கம்
யாழ்/பல்கலைக்கழகம். (தமிழ் சிறப்பு)

✤ ✤ ✤

மனப்பதிவில் இருநாவல் மணியான ஆராய்வு;
அபாயம் வருகிறது ஆருக்கோ எனப்பயந்தேன்..
கோபுரத்தின் தீபம் கோபுரத்தைக் காட்டாது
நீசொன்ன சிறுகதைதான் நெஞ்சில் தெரிகிறது!
புதுக்கவிதைக் காரருக்கோ பூவாலே போட்ட அடி;
முன்னும்பின்னு மெங்கள் முழுமணியின் நினைவலைகள்!
எண்ணக் கருத்ததனை எடுத்துரைப்பேன் கேளாய்.
வண்ணக் கலவையென மாதமும் மலர்வாயே!

மண்டூர். தேசிகன்.

✤ ✤ ✤

'சுயமரியாதை புதைபடுகிறது' யதார்த்தமாக அமைந்துள்ளது. நெஞ்சத்தைத் தொடும் சிறுகதை. நாவல் விமர்சனம் இன்னும் ஆழமாக அமைந்திருப்பின் நன்று. 'எழுத முனையும் பேனு' எழுதத் தூண்டவைக்கும் ஒரு முயற்சி.

கொழும்பு - 12. நீள்கரை நம்பி.

✤ ✤ ✤

இரண்டு சிறுகதைகளும் நல்ல தேர்வு. புதுக் கவிதைகள் நிறைய இடம் பெற்றிருக்கலாம். இரா. சரஸ்வதியின் அறிமுகம் மாதிரி, மறைந்திருக்கும் தரமான பெண் எழுத்தாளர்களை தொடர்ந்தும் அறிமுகப்படுத்துங்கள்.

பரந்தன். தாமரைச்செல்வி.

# நியாயமான போராட்டங்கள்

● குறுநாவல்

— 1 —

கண்ணுக்கெட்டிய தூரம்வரை கருநீலக்கடல். அதிலே கரும் புள்ளிகளாய்த் தெரிகின்ற மீன்பிடி வள்ளங்கள். அடுக்கடுக்காய்ப் பேரலைகளை அள்ளிவீசுகின்ற கடலின் மேற்பரப்பில் சூரியன் ஒளியை அள்ளித் தெளித்துக்கொண்டிருக்கிறான். அந்த ஒளியின் கதிர்த்தெறிப்பால் வெள்ளியாகப் பளிச்சிடுகின்ற கடற்பரப்பு! வெயில் ஏற ஏற நீலக்கடலும் பாதி வெள்ளிப் பாதரசமாக மாறிக்கொண்டிருந்தது.

கட்டுமரத்துறைக்கு மேற்காக, கரையோரம் செழித்து வளர்ந்து குலை தள்ளியிருந்த தென்னை மரங்கள் இரண்டில் வலையின் இருமுனைகளை முடிந்துகட்டிவிட்டு பழுது பார்த்துக்கொண்டிருந்த சாமித்தம்பியின் பரந்த மார்பிலிருந்தும், முகத்திலிருந்தும், முதுகுப்புறத்தாலும் வியர்வைத் துளிகள் முத்துக்களாய் ஊர்வலம் போய்க்கொண்டிருந்தன. நெற்றியில் வடிந்த வியர்வையை கைவிரல்களால் அழுத்தித் துடைத்து கைகளை உதறி, சாரத்தில் துடைத்துவிட்டு மீண்டும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்த சாமித்தம்பியை தூரத்தே பேச்சிமுத்துவின் குடிசையின் முன்னே கருவாடு காயப் போட்டுக்கொண்டிருந்த கிளியம்மா வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆறடியை எட்டும் உயரம், அகன்ற தோள்கள், சதைப்பிடிப்பான மார்பும் கைகளும், வசீகரமான முகத்தோற்றம், இத்தனைக்கும் மேலாக சுறுசுறுப்பான சுபாவம் — இத்தனையையும் தன்னகத்தேகொண்ட சிறந்த உழைப்பாளியான இளைஞனை எந்தப் பெண்ணுக்குத்தான் பிடிக்காது? அதிலும் கிளியம்மா சாமித்தம்பியின் மாமன் மகள். இதற்குமேல் நாட்டம் ஏற்படுவதற்கு வேறு காரணமும்வேண்டுமா என்ன?

வேலை செய்துகொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. பதினொரு மணி வெயில் படைபடையாக முதுகில் விழுந்து சுள் என்று கொதித்தது. அறுந்திருந்த முனையில் புதுநூல் தொடுத்து இழுத்துக் கட்டிவிட்டு, பின்புறத்தில் நசநசத்துக்கொண்டிருந்த வியர்வையை அரிவாள் முனையால் வளித்து உதறினான் சாமித்தம்பி. வயிற்றில் சிறிது பசி எடுப்பதுபோலிருந்தது. காலையில் சாப்பிட்ட சுட்ட கருவாடும் பழஞ்சோறும் இவ்வளவு நேரம் தாக்குப்பிடித்ததே பெரிய காரியம்!

பூரணமாக செப்பனிடப்பட்ட வலையை, சுகமாகி வெளியேறும் நோயாளியைப் பார்க்கும் வைத்தியர்போல் பூரிப்புடன் பார்த்துக்கொண்ட சாமித்தம்பி, 'இனி குடிசைக்குப் போகலாம்' என்று எண்ணியபடி திரும்பினான். தூரத்தே கிளியம்மாவின் நிழலாட்டம் அவனை ஈர்க்கவேசெய்தது. உள்ளத்தில் எழுந்த பூரிப்பு உடலையும் பற்றிக்கொள்ள, புதிய சினிமா டூயட் பாடல் ஒன்றை 'ஹம்' பண்ணியபடி அவளை நோக்கி நடந்தான். அவன் வரவு அவள் முகத்தைத் தாமரை மலராக்கியது. இதயம் ஒரு கணம் பரபரப்பால் துள்ளியது.

பேச்சிமுத்துவின் குடிசையருகில் வந்த சாமித்தம்பி ஒரு கணம் தரித்து நின்றான். கைகளைத் தலைக்குப் பின்னே கோர்த்தபடி கிளியம்மாவை நிமிர்ந்துபார்த்தான். பருவப் பூரிப்பில் உச்சிமுதல் பாதம் வரை மொழுமொழு என்றிருந்தாள். கறுப்பியானாலும் கட்டான உடல்வாகு. காளையரை கட்டி நிறுத்தும் வசீகரம்; வஞ்சகமில்லாமல் விளைந்துபோயிருக்கும் மார்பகங்கள். சாமித்தம்பி சொக்கித்தான் போனான்.

கிளியம்மாவால் அவனது குறுகுறுப்பான பார்வையைச்

சந்திக்க முடியாமல்போகவே பார்வையைத் தாழ்த்தினுள். மடித்துக் கட்டப்பட்டிருந்த பொலியெஸ்டர் சாறத்தையும் கா்லின் திரட்சியையும் தான் பார்க்கமுடிந்தது.

''கிளி'' என்று மென்மையாக அழைத்தான் சாமித்தம்பி. கண்களை உயர்த்திய கிளியம்மா, கிறங்கவைக்கும் புன்னகையுடன் அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த அவனது பார்வையைத் தரிசிக்க முடியாமல் மறுபடியும் தலையைக் குனிந்துகொண்டாள்.

''என்ன பேசாமல் நிற்கிறீர் . . . ? அப்ப நான் போகட்டே?''

அவள் சடாரென்று நிமிர்ந்து அவனை நோக்கினுள். அவன் போய்விடக்கூடாதே என்ற தவிப்பும் அவசரமும் அவள் செயலில் இருந்தது.

''இந்தக் கருவாட்டுக் கூடையை ஒருக்கா தூக்கி விடுங்கோ . . .'' என்றுள் மெதுவாக.

அவன் சிரித்துக்கொண்டே அருகில் வந்தான். முறுக்கேறித் திரண்டிருந்த அவனது கரிய மேனி உச்சி வெயிலில் பளபளத்தது. மார்புக் கேசங்கள் மனதை அலைக்களித்தன.

அருகே வந்த சாமித்தம்பி கருவாட்டுக் கூடையை எடுக்காமல் அவளைக் குறும்புடன் நோக்கினுன்.

''தூக்கி விடுங்கோவன்..''

''பொறுமன் இப்ப என்ன அவசரம் . . .?''

''ஐயா வரப்போருர் . . . நான் போகவேணும் . . . அடுப்பில உலை கொதிக்குது.''

''இங்கையும் கொதிக்குது . . .'' அவன் நெடுமூச்செறிந்தான். ''கிளி . . . நீ வரவர வடிவாய் வாருயடி..''

''அப்ப நான் முந்தி வடிவில்லையே...'' முகம் நாணத்தால் சிவந்தது.

''முந்தியும் வடிவுதான். இப்பகூட வடிவு . . .''

''புளுகாதையுங்கோ ...''

''கிளி . . .''

''ம் . . .''

''உன்னேட ஒரு விசயம் கதைக்கவேணும் . . .''

'' . . .''

''என்னை உனக்குப் பிடிச்சிருக்கே . . .''

'' . . .''

''ஏன் பேசுறீரில்லை . . . பிடிக்காட்டில் சொல்லுமன்''.

''உங்களைப் பிடிக்காட்டில் வேலை மினைக்கட்டு இந்த வெயில்லை நிண்டு உங்களோட கதைக்கிறனே . . .?''

அந்தப் பதிலில் அவன் பூரித்துப்போனுன்.

''நேரம் போட்டுது . . . உயர்த்தி விடுங்கோ . . .''

கூடையை அவள் தலைக்கு உயர்த்திவிட்டு அவள் நடந்து போகும் பின் எழிலையே பார்த்துக்கொண்டிருந்த சாமித்தம்பி, வீரசொக்கனின் குரல் கேட்டுத்தான் இந்த உலகிற்கு வந்தான்.

''என்ன மச்சான் கெதியிலை சாப்பாடு போடப் போறுய்போலை . . .'' நண்பனின் குறும்பான கிண்டலை ரசித்தபடி பதிலெதுவும் சொல்லாமல் சிரித்தான்.

''பெட்டை இப்ப சரியான குளுகுளு . . .''

நண்பர்கள் உரையாடிய படியே நடந்தனர். இடையே இரண்டொரு தடவை திரும்பிப் பார்த்தாள் கிளியம்மா. மனது மகிழ்வால் நிரம்பியிருந்தது.

கருவாட்டுக் கூடையை இறக்கிவைத்துவிட்டு நிமிர்ந்த போது எதிரே பேச்சிமுத்தர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள் கிளியம்மா. 'ஐயா நாங்கள் கதைச்சதைக் கண்டிருப்பாரோ?' — உள்ளத்தில் கள்ளம் புகுந்துவிட்டதால் பயம் ஏற்பட்டது.

''உதார் கிளி போறது...?''

''அது சாமித்தம்பி மச்சானும் அவரின்ர கூட்டாளி வீரசொக்கனும் ஐயா . . .''

— ச. முருகானந்தன் —

## காணிக்கை

உள்ளத்
தடாகத்தில்...
துயரத்தின்
ஒளியில்...
மொட்டவிழ்க்கும்
கண்ணீர்
பூக்கள் —
காலக்கோயிலில்
வறுமைத்
தேவதைக்கு
ஏழைப்
பக்தனல்
ஆராதனைக்கு
படைக்கப்பட்ட
துன்பக்
காணிக்கை !

— துறைநீலாவணை
பூபால் கதிரவேல்.

''அட எங்கடை இவனே. நல்ல பிள்ளை... நல்ல உழைப்பாளி... கெதியிலை முன்னுக்கு வந்திடுவான்... ம்... எங்கெங்கோ ஆராருக்கு எழுதியிருக்கோ... உன்னையும் ஒருத்தன்ர கையிலை பிடிச்சுக்கொடுத்திடலாம் எண்டால் கழுத்திலை ஒரு சங்கிலிகூட இல்லாமல் ம்...'' பேச்சிமுத்தர் நெடுமூச்செறிந்தார்.

''பிள்ளை நான் ஒருக்கால் சம்மாட்டியார் வீடுவரைக்கும் போயிட்டு வாறன்... அந்தோனித் தாத்தா வந்தால் நான் போயிட்டதாய்ச் சொல்லு...''

''பேச்சிமுத்தர் வீதியில் இறங்கி நடந்தார். ஏதோ யோசனையில் நடந்தவர் எதிரே பாஸ்கரன் மாஸ்டரைக் கண்டதும் அசடுவழியச் சிரித்தபடி நின்றார்.

''என்ன பேச்சிமுத்து... இந்த வெயிலுக்கால...? தவறணைக்கோ...?''

''இல்லை மாஸ்டர்... ஒருக்காச் சம்மாட்டியாரின்ர வீட்டுப் பக்கம்... நீங்கள் தூரப் பயணம்போல...?''

''சிலாபத்துக்குப் போறன்... என்னுடைய கூட்டாளி... ம்... சொல்ல மறந்துபோனன். உங்கட ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமாக ஒரு டொக்டர் வாறரெல்லே... டொக்டர் மூர்த்தி... அவர் என்னுடைய கூட்டாளிதான். யாழ்ப்பாணத்திலையிருந்து வாறார்... அதுதான் ஸ்டேசனிலபோய் அவரைக் கூட்டியாரப்போறன்...''

''சந்தோசமாயிருக்கு மாஸ்டர்... இனி எங்கட பாடு பிழையில்லை. அந்தரம் ஆபத்துக்கு பக்கத்திலேயே டாக்குத்தர் இருப்பார்... இவ்வளவு நாளும் கிழமைக்கு இரண்டு நாள் பின்னேரத்தில டாக்குத்தர்மார் வந்திட்டுப் போயிடுவினம்... தேவையான நேரத்துக்கு ஆளில்லை. நாங்கள் கார் பிடிச்சு சிலாபம் ஆசுபத்திரிக்குக் கொண்டு போறதெண்டால்லேசுப்பட்ட காரியமே...?''

''சரி... நேரம் போட்டுது... அப்ப நான் வரட்டே?'' பாஸ்கரன் மாஸ்டர் புறப்பட்டதும் பேச்சிமுத்துவும் கைகூப்பி விடைகொடுத்தார்.

பாஸ்கரன் மாஸ்டருக்கு வயது இருபத்தியாறுதான். மணமாகவில்லை. எம். பி. யின் காரியதரிசிக்கு பத்தாயிரம் கொடுத்துத்தான் நியமனம் பெறமுடிந்தது. உயர்தர வகுப்பில் இரண்டு 'ஏ' யும் இரண்டு 'சி' யும் பெற்றிருந்தும் தரப்படுத்தலால் பல்கலைக்கழகம் போகும் வாய்ப்பைப் பெறமுடியாமல் போய்விட்டது. நாலைந்து வருடங்கள் வீட்டில் சும்மா இருந்து சலிப்புற்றநிலையில் தான் இந்த நியமனம் – அதுவும் பகீரதப்பிரயத்தனத்தினால் கிடைக்கப்பெற்றது. முதல் நியமனமாதலால் கஸ்டமான பிரதேசத்திற்குப் போட்டுவிட்டார்கள். மதுரவெளிப் பாடசாலைக்கு வந்து மூன்று மாதம் கடந்துவிட்ட இந்த நிலையிலும் அவனால் ஊரோடு ஒன்றமுடியவில்லை. மாற்றத்திற்கு முயன்றும் சரிவராத நிலையில் விரக்தியுற்றிருந்த இவ்வேளையில் அவனுடைய கல்லூரி நண்பன் மூர்த்தி இதே கிராமத்து வைத்தியசாலைக்கு உதவி வைத்திய அதிகாரியாக பொறுப்பேற்க வருகின்ற செய்தி அவனுக்குத் தேனாக இனித்தது. இனிப் பொழுதுபோகும் என்று மனதில் பூரித்தான்.

பாஸ்கரன் சிலாபம் புகையிரத நிலையத்தை அடைந்தபோது ரயில் வர பதினைந்து நிமிடம் இருந்தது. காத்திருந்தான். தாமதமின்றி ரயிலும் வந்தது. இறங்கிவந்த மூர்த்தியைக் கண்டதும் பாஸ்கரன் பூரித்துப்போனான். சூட்கேசை வாங்கிக்கொண்டான். மகிழ்ச்சியாக உரையாடியபடியே பஸ் நிலையத்திற்கு வந்தார்கள். ஹோட்டலில் தேநீர் அருந்தினார்கள். பசுமையான பழைய ஞாபகங்கள்... சோக்கிரட்டீஸ் நாடகத்தில் சோக்கிரட்டீஸும் நண்பனுமாக இருவரும் நடித்தது... விடுதியில் இருந்தபோது களவாக 'அட்லஸ் ஒன்லி' ஆங்கிலப் படம் பார்க்கப்போய் அங்கே ஆபாசக் காட்சியெதுவும் இல்லாமல் ஏமாந்ததோடு மட்டுமல்லாமல் வார்டனிடமும் வகையாக மாட்டிக்கொண்டு பிரம்படிபட்டது... தென்னந்தோப்பில் கள்ள இளநீர் பறித்துக் குடித்தது... இப்படி பாடசாலை காலத்துப் பசுமையான நினைவுகளை அசைபோட்டுக்கொண்டார்கள்.

பஸ் வந்தது. ஏறினார்கள். வழிநெடுக ஓயாமல் உரையாடினார்கள். ஓட்டுத்தொழிற்சாலைகள், செங்கட்டிச் சூளைகள் – எல்லாவற்றையும் கடந்து குடிசனம் குறைந்த தென்னந்தோப்புப் பிரதேசங்களை ஊடறுத்துக்கொண்டு பஸ் விரைந்தது.

இடையிடையே சில வீடுகள் எல்லாம் மண் குடிசைகள்தான் - அவை அப்பிரதேச மக்களின் வறுமையைப் படம்

பிடித்துக் காட்டிக்கொண் டிருந்தன.

''இந்தப் பகுதிப் பிள்ளை யளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறதெண்டால் சரி யான கஸ்டம்...! கிடைத் ததே வாத்தி வேலை... அது வும் இந்தப் பட்டிக்காட் டிலை...'' பாஸ்கரன் சலித்துக் கொண்டான்.

''சரிதான்... இவ்வளவு நாளும் ஏதாவது ஒரு உத்தி யோகம் கிடைச்சால்போது மென்று அழுதாய்... இப்ப என்னடாவெண்டால் சொகுசு தேடுகிருய்...'' மூர்த்தி சிரித்தான்.

''நீ ஒரு எழுத்தாளன் என்கிறதைக் காட்டுகிருய்... எனக்கு என்னவோ ஒரே போராக இருக்கு... ஒரு தியேட்டர்கூட இல்லாத ஊரிலைவந்து மாரடிக்க வேண் டிக் கிடக்கு. தலையெழுத்து.''

''நீ இப்படி சலித்துக் கொள்ளுறதில் எந்தவித அர்த் தமுமில்லை. இந்தப் பிரதே சத்து மக்கள் எவ்வளவு கஸ் டங்களுக்கிடையிலும் போரா டிக்கொண்டு உழைத்து வாழத் தான் செய்கிருர்கள்... நான் கம்பளையிலை இரண்டு வருஷம் வேலை செய்தனுன்... மலை யகத் தோட்டத் தொழிலா ளர்கள் குச்சு லயங்களிலை வாழ்ந்துகொண்டு படுகிற கஸ்டங்களை யோசித்துப் பார்த்தால் இதெல்லாம் எந்த மூலைக்கு ...? கொஞ்ச நாளைக் குப் பழகினுல் எல்லாம் சரி யாகிவிடும்... சுற்ருடலுக்கு ஏற்ற மாதிரி எங்களை மாற்றிக் கொள்ளுகிற மனப்பக்குவம் தேவை... இப்படிப்பட்ட கிராமங்கள்தான் முன்னேற வேண்டும்... உன்போன்ற ஆசிரியர்கள் இதற்காக

---

அடுத்த இதழில்.....

## அமரகவி நீலாவணன்

எழுதிய

# "வடமீன்"

குறுங்காவியம்

ஆரம்பமாகிறது.

---

உழைக்கலாம்... கல்வி, சுகா தார வசதிகள் இந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்க நாமிரு வரும் மனப்பூர்வமாக உழைத் தால் பலன் கிடைப்பதுடன் எமக்கும் ஆத்ம திருப்தி கிடைக்கும்... நாம் எமது கடமையைச் சரிவரச் செய் தால் இந்த மதுரவெளிக் கிராம மக்கள் எங்களை காலம் காலமாக நினைவுவைத்திருப் பார்கள்...''

மூர்த்தி, பாஸ்கரனின் உள்ளத்தில் உயர்ந்துகொண்டு போனுன். 'இவனுல் இவ்வ ளவு பரந்த மனத்துடன் செயற்பட எப்படி முடிகிறது?' என்று வியந்தான்.

மதுரவெளி வந்து விட்டது. பஸ்ஸிலிருந்து இறங் கியதும் மூர்த்தி நோட்டம் விட்டான். நெடுஞ்சாலையி லிருந்து பிரிந்து வலதுபுறமாக கடற்கரையை நோக்கி நீண் டிருந்த அந்தச் சந்தில் இரண்டு பக்கமும் நெருக்கமாகப் பல குடிசைகள் அமைந்திருந்தன.

''கடற்கரை வீதியில்தான் ஆஸ்பத்திரி இருக்கு... பள்ளிக்கூடமும் அருகிலை தான்...''

இருவரும் நடந்தார்கள். அவர்களைக் கண்ட அந்தோனி யும், பெர்னுன்டோவும் சூட் கேஸ், பெட்டிகளை வற்புறுத்தி வாங்கிக்கொண்டு கூடவந்தார் கள். புதிய வைத்தியரை மரி யாதையுடனும் மகிழ்வுடனும் பார்த்தார்கள்.

மூர்த்தி அவர்களுடன் பேச்சுக்கொடுத்தபடி நடந் தான். குடிசை வாசலில் நின் றவர்கள் வழிநெடுகிலும் எட் டிப் பார்த்தார்கள். சில சிறுவர்கள் அம்மணமாக நின்று விளையாடிக்கொண் டிருந்தார்கள்.

கடற்கரை வீதியில் வந் ததும் கடற்காற்று இதமாய் வரவேற்றது. கடலலைகள் பேரிகை முழங்கின. கரு வாட்டு நெடி பன்னீர் தெளித் தது.

கடற்கரையில் மலங் கழித்துவிட்டு ஒரு நடு வயதுக் காரர் கடல்நீரில் கழுவிக் கொண்டிருந்ததைக் கண்ட மூர்த்தி, தனக்கு நிறைய வேலை இந்த ஊரில் இருக்கும் என்று எண்ணிக்கொண்டான்.

''அதுதான் ஆஸ்பத்திரி'' அந்தோனி கூறியதும் மூர்த்தி நோக்கினுன். சிறிய கட்டிடம்! 'இன்னும் நாலு வருடங்கள் இங்கேதான் இருக்கப் போகிறேம்' என்ற எண்ணம் மனதில் தோன்றி மறைந்தது.

(தொடரும்)

# மட்டக்களப்பு வாசகர் வட்டம்

கலை - இலக்கிய - சமூக - பொருளாதார விஷயங்கள் பற்றி தாம் படிப்பவற்றை மற்ற வர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைந்த இளை ஞர்கள், தமக்குள் ஒன்றுகூடி அமைத்துக் கொண்ட ஓரமைப்பே ''மட்டக்களப்பு வாச கர் வட்டம்''.

மட்டக்களப்பின் கலை - இலக்கிய உலகில் காணப்பட்ட ஒரு தேக்க நிலை, வாசகர் வட் டத்தை அமைப்பதில் முக்கிய இடத்தை வகித்த சிவராம், மகாதேவா, கேசவன், தேவ காந்தன், திவாகரன் போன்ற சில இளைஞர் களின் சிந்தனையைத் தூண்டியது. அதன் செயல் வடிவமாக, 1980ம் ஆண்டின் நடுப் பகுதியில் முழுக்க முழுக்க இளைஞர்களின் அய ராத முயற்சியினால் ''மட்டக்களப்பு வாசகர் வட்டம்'' உதயமானது.

இன்றைய காலகட்டத்தில், மட்டக்களப் பின் கலை - இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை இந்த அமைப்பு ஏற்படுத் தியிருக்கிறது என்பதை, அதன் கடந்த கால நடவடிக்கைகளைக் கவனித்து வருவோர் ஒப்புக் கொள்வர். இவ்வமைப்பின் முக்கியத்துவம், அது ஒழுங்கு செய்த கருத்தரங்குகளின் மூலமே வெளிப்படலாயிற்று. இந்தக் குறுகிய கால எல்லைக்குள் எட்டுக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நடத்தியது, மட்டக் களப்பு கலை - இலக்கிய உலகில் ஒரு சாதனை யாகவே கருதப்படவேண்டும்,

மட்/வாசகர் வட்டம் ஒழுங்கு செய்த கருத்தரங்குகளில், மட்டக்களப்பின் தமிழறி ஞர்களையும், இலக்கிய வாதிகளையும், கலை - இலக்கியத்தில் ஆர்வமுள்ளோரையும் ஒரே அரங்கில் ஒருங்கிணைத்து கருத்துப் பரிவர்த் தனை செய்ததன் மூலம், ஒரு இலக்கியப் புத் துணர்வு ஊட்டப்பட்டது.

மதுரையில் நடந்த 5வது உலகத் தமிழா ராய்ச்சி மகாநாட்டில், மட்டக்களப்பிலிருந்து கலந்து கொண்டவர்களான பிரபல எழுத்தா ளர் திரு. எஸ். பொ, அண்மையில் மறைந்த திரு. ம. சற்குணம், வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராஜா, திரு. செல்வராஜ கோபால் (ஈழத்துப் பூராடனர்) ஆகியோரை அழைத்து, தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவங்களையும், அது தொடர்பான அபிப்பிராயங்களையும் மட் டக்களப்பு மக்களுடன் பகிர்ந்து கொள்ள வழியமைத்துக் கொடுத்த வகையில், மட்டக் களப்பு வாசகர் வட்டம் பிரபல்யம் பெற்றது.

மட்/வாசகர் வட்டத்தால் ஒழுங்கு செய் யப்பட்ட எல்லாக் கருத்தரங்குகளிலும் பார் வையாளர்களின் கருத்துகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

பாரதி நூற்றுண்டு தொடர்பாக, மட்டக் களப்பிலே முதலாவது வைபவத்தை மட்/ வாசகர் வட்டமே ஒழுங்கு செய்திருந்தது. பாரதியாரின் பெருமைகளை நன்கறிந்த திரு கோணமலை தியாகி இராஜகோபால் அவர்களை அழைத்துக் கௌரவித்தது. (மகாகவி பாரதி யாரின் ஒரு பெரிய உருவப்படத்தை மட்/ பொது நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்தமை யும் கவனிக்கத் தக்கது)

தமிழ்ச் சிறுகதைகள், புதுக் கவிதை, தமிழ்ச் சினிமா போன்ற துறைகள் பற்றி கருத்தரங்குகளை நடத்தி, மட்டக்களப்பு கலை- இலக்கிய ஆர்வலர்களிடையே தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுள்ள வாசகர் வட்டம், தான் நடாத்திய கருத்தரங்குகளில் வெளியிடப்பட்ட கருத்துக்களை எழுத்துருவம் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமானால் அது பயனுள்ளதாயிருக்குமல்லவா?

— என். எஸ்.

## வசைபாடும் வட்டம்

மட்டக்களப்பில், காலத்துக்குக்காலம் பல இலக்கிய அமைப்புகள் தோன்றி, ஒன்றை ஒன்று உரசிக்கொள்ளாமல், தத் தம் வழியில் இலக்கியப்பணி புரிந்து வந் திருக்கின்றன. ஆனல் அண்மையில் 'வாசகர் வட்டம்' என்ற பெயரில் உரு வாகியுள்ள ஒரு அமைப்பு, மட்டக்களப் பில் கால்நூற்றுண்டுக்கு மேலாகத் தன் னலமற்ற இலக்கியப்பணி புரிந்துவரும் மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தை யும் அதன் உறுப்பினர்களையும் வசை பாடித் தீர்த்துள்ளது. மட்டககளப்பின் இலக்கிய வரலாற்றில் முதன் முறையாக நிகழ்ந்துள்ள அசிங்கம் இது.

— ந. தர்மலிங்கம்.

எழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
எழாலை மேற்கு
சுன்னாகம்
ERLALAI WEST
CHUNNAKAM

## அன்புமணி பார்வையில்

# "நெருப்பு மல்லிகை"



'வீரகேசரி' நூல் வெளியீட்டு வரலாற்றில் முதல் முறையாக எழுத்தாளர் பெயரை முதலில் போட்டு 'செம்பியன் செல்வன்', நெருப்பு மல்லிகை என்று மகுடமிட்டதுமல்லாமல், முன் அட்டையிலேயே 'அதிசிறந்த பிரதேசப் பரிசுநாவல்' என்று கொட்டை எழுத்தில் போட்டு வெளிவந்திருக்கும் நாவல் இது.

காலங்காலமாக அரைத்து அரைத்துப் புளித்துப்போன ஜமீந்தார் பணிக் கதை. தி. மு. க. எழுத்தாளர்கள் (அண்ணு, மு. க. போன்ருேர்) ஆரம்ப நாட்களில் எழுதிய பிரச்சாரக் கதைகளின் பாணியில், மிகைப்படுத்தப்பட்ட கொடுமைகளின் மொத்த உருவமாக ஒரு பணக்காரன். கண்ணில் படும் பெண்களையெல்லாம் மோகிப்பது அவன் வேலை. அவன் சூழ்ச்சிகளில் அவதியுறும் குடும்பங்கள். பணத்தில் மயங்கிப் பாய்விரிக்கும் குடும்பப் பெண். நினைத்த மாத்திரத்தில் கற்பைப் பறிகொடுத்து நிற்கும் மேல்தட்டுவர்க்கப் பெண். இறுதியில் பணக்காரப் பிரமுகருக்கு அவலச்சாவு. இது கதையின் கரு.

என்னதான், ''சிறகொடிந்த தாய்ப் பறவை ஒன்று குஞ்சுகளைக் காக்க நடத்தும் போராட்டம்'' என்று சப்பைக்கட்டுக் கட்டினுலும், கதை என்னவோ கொடுமைக்காரப் பணக்காரனைச் சுற்றித்தான் சுழல்கிறது. இந்த லட்சணத்தில், தமிழர்க்கு உதவும் ஒரு பிக்கு கருணனந்தா அதுவும் யாழ்ப்பாணத்தில்; இன வேற்றுமை கடிந்து தமிழர் மத்தியில் கொள்கை வளர்க்கும் சிங்கள லட்சியவாதி ஆரியரத்தின! யாரைக் காக்காய் பிடிப்பதற்காக இந்த மசாலா? 'தேசிய ஒற்றுமை' லேபல் ஒட்டி சாகித்திய மண்டலப் பரிசு எதற்காவது குறி வைப்பதற்கா? இத்துடன் நிற்கவில்லை கதை. யாழ்ப்பாணக் கதைகளுக்கே உரித்தான கல்யாண, சீதனப்பிரச்சினே. சாதிப் பிரச்சனை. அதுவும் போதாதென்று இடையிடையே, சுரண்டல் சங்கதி, வர்க்க உணர்வு, தேர்தல் தில்லுமுல்லு. ஐயோ! மசாலாக்கள் அதிகமாகி, கதை சாம்பார் ஆகிவிட்டதே.

கதைதான் சாம்பார் என்ருல் அதைச் சொல்லியிருக்கும் பாணி (Style) 50 வருடங்களுக்கு முந்திய, வடுவூர் துரைசாமி ஐயங்கார், கோதைநாயகி பாணியை நினைவூட்டுகிறதே! ஒவ்வொரு பாத்திரத்திற்கும் இடத்திற்கும், பொருளுக்கும் தலைமுறை வரலாறு (Meridi-tary Mistery) குளத்தில் ஒரு பையன் விழுந்துவிட்டால்கூட, குளத்தின் பழங்கால வரலாறு முழுவதும் தெரிவிக்கப்பட்டபின் தான், பையன் காப்பாற்றப் படுவான். ஒரு வரியில் சொல்லும் விஷயத்துக்கு பக்கம் பக்கமாக வர்ணனை. வாசகர்கள் முன்கூட்டியே ஊகித்துவிடும் சம்பவங்களுக்கெல்லாம் சாங்கோ பாங்கமான விபரிப்பு. ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் தத்துவார்த்த விளக்கம். கதையின் இடையிடையே கதாசிரியர் குறுக்கிட்டு கொள்கை பற்றிய லெக்சர்! எந்தக் காலத்தில் இருக்கிருேம் நாம்?

கதையின் கழுத்தைத் திருகித் திருகி ஏற்படுத்தும் செயற்கைத் திருப்பங்கள்; கோவையில்லாமல் தனித்து நிற்கும் அத்தியாயங்கள். அலாவுதீன், பாதாளபைரவி, மாயாஜாலங்களைத் தோற்கடிக்கும் திடீர் திடீர் மாறுதல்கள். கொஞ்சமும் யதார்த்தமில்லாத சம்பவங்கள்! காதலர்களின் அர்த்தமில்லாத அலம்பல் உரையாடல் (கொஞ்சலாம்!) சகிக்கமுடியாத பேச்சுத்தமிழ். (மண்வாசனையாம்!)

பாத்திரவார்ப்பில் எத்தனை குளறுபடி? தம்பிஜயா, பிரமுகரா அல்லது இளிச்சவாயரா? (சினிமா காமெடியன் நினைவு வருகிறதே?) கமலம் அப்பாவியா, அசடா? வள்ளிப்பிள்ளை, செல்லம், பராசக்தி இவர்களெல்லாம் யாழ்ப்பாணத்துப் பெண்களா? யாழ்ப்பாணத்தில் செக்ஸ் இவ்வளவு மலிவா? பெண்களெல்லாம் இப்படிக் காமுகிகளா? போதும் போதாததற்கு நாவல் எங்கும் விரவிக்கிடக்கும் அளவுக்கதிகமான பாலுறவு வர்ணனை (செல்லம் - தம்பிஜயா கள்ள உறவின்போது வரும் உரையாடலில் ஒருபகுதி:-

''இதுதான் சந்தோஷம் வந்திட்டா கண் மண தெரிறதில்ல எவ்வளவு நோகிறது. இரத்தம் வருவதுபோல் இருக்கு''

''அப்ப நான் துடச்சுவிடுறன் . . . எங்க பாப்பம்?''

''நீங்க பார்த்தது போதும். விடுங்க''

''எப்ப பாக்க விட்டாய் . . . எல்லாம் இருட்டுக்க பயந்து . . . பயந்து''

எந்த மார்க்கட்டைப் பிடிப்பதற்காக இந்த 'மணியன்' வியாபாரம்?

உரையாடல்களில் இலக்கணப் பேச்சும் வரும். 'என்னே என்ன பண்ணச்சொல்ரு' 'புரிஞ்சுகொள்ளவேணும்', 'தப்பாப் பேசிரு' போன்ற இந்தியப் பிரயோகங்களும் கலக்கும். இதுதான் பிரதேசமணமா? மண்வாசனேயா?

இந்தக் கதையில் வருவதுபோல சம்பவங்கள் (காமக்களியாட்டங்கள்) யாழ்ப்பாணத்தில் எங்கோ ஒரு மூலேமுடுக்கில் நடப்பது உண்மையாக இருக்கலாம். அதற்காக அதை போக்கஸ் செய்து, இதுதான் யாழ்ப்பாணம் என்று காட்டுவதில் என்ன சிறப்பு? யாழ்ப்பாணத்தில் கடும் உழைப்பு, சமய பக்தி, சிக்கனம், கல்வி மேம்பாடு, தியாகம், பாசம், சகோதரத்துவம், ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை என்று எத்தனேயோ விழுமியங்கள் இருக்க, எங்கோ மூலேமுடுக்கில் நாறிக்கிடக்கும் அசிங்கங்களேப் பெரிதாக்கி அவற்றிற்கு இலக்கிய அந்தஸ்த்துக் கொடுப்பதில் என்ன மகிமை? குறிப்பாக 'பிரதேச நாவல்' என்று முத்திரை குத்தும் பொழுது, யாழ்ப்பாணத்து மக்களின் பொதுவான வாழ்க்கையை நாவல் போக்கஸ் செய்யவேண்டாமா?

இதற்குமுன் அப்படியான நாவல்கள் பல வந்திருக்கின்றனவே. செங்கை ஆழியான் எழுதிய அத்தனே நாவல்களும் இதற்கு உதாரணங்களாக அமைகின்றனவே. செங்கை ஆழியானேடு இணேந்து இலக்கிய இரட்டையர் என்று பேசப்படும் செம்பியன் செல்வன் இதில் சோடை போனது ஏன்? நாவலில கதாசிரியரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் இலக்கிய சாதனேப் பட்டியலேப் பார்க்கும்போது 'நெருப்பு மல்லிகை' அதற்கு ஏற்ருற்போல் அமையவில்லேயே? யாழ்ப்பாணப் பிரதேச நாவல் போட்டியில் நடுவர்குழு இந்த நாவலேச் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்ததா? நம்பமுடியவில்லேயே.

இந்த நாவலில் 'கந்தபுராண கலாசாரம்' என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. நாவலில் அப்படி எதுவும் இடம் பெறுவதாகத் தெரியவில்லே. அதை எப்படியாவது நாவலில் புகுத்தாவிட்டால், தன்னுடைய 'முற்போக்கு வேஷம்' பூர்த்தியாகாது என்பதனுல் அந்த வார்த்தை புகுத்தப்பட்டதுபோலும். நல்ல வேளே, எதையும் தாங்கும் இந்துசமயம் எழுத்தாளர்களுக்கும் சமயத்தில் கைகொடுத்து உதவுகிறது. வேறு சமயம் என்ருல் மதவாதிகள் போர்க்கொடி உயர்த்தி விடுவார்கள் அல்லவா?

'வீரகேசரி' நாவல் வெளியீட்டு வரலாற்றில் இதற்குமுன் எத்தனேயோ நல்ல நாவல்கள் வெளிவந்திருக்கின்றன. அதற்குத் திருஷ்டி பரிகாரம் 'நெருப்பு மல்லிகை' என்ற இந்த நாவல். ✿

# தேயிலே பூக்கள்

தேநீரின்
சுவையறிந்த தேச வண்டுகள் –
இங்கே தேயிலேத் தூரில்
மலர்ந்து மணம்வீசி
வீணே மடியும்
தேயிலேப் பூக்களின்
வரலாற்றை (சு)வாசிக்க
விரும்பாதது ஏனே...?

இந்த நாட்டின்
பொருளாதாரச் சுமையை
பல நூற்ருண்டுகளாக
தாங்கும் சுமைதாங்கிகள்
நாங்கள்!

நன்றிகெட்ட நயவஞ்சகர்களின்
கொலே, கொள்ளேகளேத்
தவிர வேறென்ன... சுகம்
கண்டோம்?

எம்மில் சிலருக்கு
ஓட்டுரிமை கொடுத்தவர்கள்...
தேர்தல் காலத்தில் மட்டும்
தேடி வருவார்கள்...?
வாக்கு ஏணிகளால்
ஆட்சி மாளிகையில் ஏறியபின் -
எங்கள் மன வேட்கைகளே
மட்டுமன்றி -
மண் குடிசைகளேயும் கொழுத்த
தீப் பந்தங்களே
அள்ளி வீசுவார்கள்...

கௌதம புத்தன்
வழி செல்லும் தா(ர்)மிஷ்டர்களே...
எங்கள் லயத்துக்கு வாருங்கள்.
இருபதாம் நூற்ருண்டிலும்
இன்பமே நுகராத –
''அடிமைப் பூக்கள்''
ஆயிர மாயிரமாய்
மலர்ந்து மடிவதை
வந்து பாருங்கள்!

— ஸ்ரீ தேவிப்ரியா

இரா. ரவி ஆனந்தன்

எழுதும்

# குறைப் பிரசவங்கள்

சிறுகதை

பூரணை விடுமுறை தினத்து மாலைநேரம்.

குடும்பமாக, குழாமாக, இரட்டையாக, ஒற்றையாக... எல்லோர் முகத்திலும் மாலைப் பொழுதின் ரம்மியத்தை அனுபவிக்கின்ற ஆர்வம். மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருக்கும் மனிதர்கள், மணலில் சரிந்து நிற்கும் மோட்டார்சைக்கிளின் மறைவில் காதல் சரிதம் துவங்கி விட்ட இளையதலைமுறைப் பிரதிநிதிகள்...

கடற்கரை மணற்பரப்பு நீண்டு விரிந்து கிடந்தது. ஒவ்வொரு சதுர மீட்டரிலும் நூறுநூறு கால்கள் பதிந்து சென்றதுபோல சுவடுகள்.

ஒரு படகோடு சேர்த்து நிறுத்தப்பட்டிருந்த 'யமஹா' வின் முன்னால் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவளுடைய முகத்தில் ஆர்வமில்லை. அவனுடைய முகத்தில் பாவமில்லை. ஊடல் நடந்துவிட்டதா என்றால் அதுவும் இல்லை. அரை மணிக்கும் மேலாக மௌன பாஷை. மௌனத்தைக் கலைக்கின்ற பெருமூச்சுக்கள்மட்டும் அடிக்கடி வெளிப்பட்டன. ஒரு தொடர்கதையின் உச்சக் கட்டத்தை அல்லது கடைசி அத்தியாயத்தை எப்படி எழுதுவது என்று தெரியாத இயலாமை. அந்த இரண்டு மனங்களும் உள்ளுக்குள் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தன. எவ்வளவு நேரந்தான் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கமுடியும்? அவன் மெதுவாக எழுந்து நின்றான். காற்சட்டையின் இரண்டு பைக்குள்ளும் கைகளை நுழைத்துக்கொண்டு நிமிர்ந்து நின்றான். கடற்காற்றில் தலைமுடி பின்னோக்கிப் பறந்த விதம்—மோட்டார் சைக்கிளில் வரும்போதும் அப்படித்தான் இருக்கும். அவளை நோக்கி வலது கையை நீட்டினான். அவளாகவே எழுந்தாள். முகத்தில்வந்து விழுந்த மயிர்க்கற்றையை விரல்களால் ஒதுக்கிவிட்டுக்கொண்டாள்.

அந்தக் கூந்தலில் நடு வகிடிட்டு உச்சி, நீள விரல்களின் செம்மை, சிவந்த முகத்தின் பரந்த நெற்றி... ஒவ்வொன்றிலும் அந்த இளைஞனின் பார்வைபட்டுவர, கண்களும் கண்களும் சந்தித்த அந்தக் கணத்தில் நெஞ்சின் பாரம் அதிகமாகிவிட்டாற் போல் இருந்தது.

''ஒன்றுமே பேசாமல் இருப்பதானால் இங்கே வந்திருக்கவேண்டியதில்லையே உமா'' என்றான் அவன்.

''நீங்கள் ஒன்றும் பேசவில்லை. அதனால் நானும் பேசவில்லை'' — இது அவள்.

''நீ போட்டிருந்த கடிதத்தில்...''

''அம்மா எனக்கு மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருக்கிறா என்று எழுதியிருந்தேன்.''

''பார்த்துவிட்டார்களா?''

''அடுத்த வாரம் நாளும் குறித்துவிட்டார்கள்.''

''இவ்வளவு சாதாரணமாக இதை உன்னால் எப்படிச் சொல்லமுடிகிறது?''

''நான் என்ன செய்யட்டும்? அழவா?''

''வேண்டாம். நீ அழ ஆரம்பித்தால் பிறகு நிறுத்த மாட்டாய். உன் மிருதுவான உள்ளம் எனக்குத் தெரியும். ஆனால் ஒரு கேள்வி. மாப்பிள்ளை பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியப்படுத்த முதல், 'மாப்பிள்ளை பார்த்துவிட்டேன்' என்று ஏன் நீ அம்மாவிடம் சொல்லவில்லை?'' — ராஜாவின் குரல் ஆரோகணித்தது.

''சொல்லத் துணிவு வரவில்லை. ஆனால் நான் சொல்லுமுன்பே சித்தப்பா அம்மாவிடம் உங்களைப்பற்றிச் சொல்லிவிட்டார்.''

''உத்தியோகம் பார்க்கிறேன்; சம்பாதிக்கிறேன்; சகோதரப் பிரச்சினை கிடையாது; கௌரவமான பெற்றோர் இருக்கிறார்கள்... இதை எல்லாம் உன் சித்தப்பா சொல்லியிருப்பார். உன் அம்மாவுக்கும் இது தெரியும். மேலே அவ என்ன எதிர் பார்த்தா?''

அவள் சிறிது தயங்கினாள். பிறகு, ''சித்தப்பா அதெல்லாம் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. அம்மா எதிர்பார்த்தது குடிப்பழக்கம் இல்லாத ஒருவரை. ஆனால்..'' என்று இழுத்தாள்.

''புரிகிறது. எனக்குக் குடிப்பழக்கம் இருந்தது. அது

உன் சித்தப்பாவுக்குத் தெரியும். ஏனென்றால் எனக்கடுத்த மேசையில் அவர் தினமும் மட்டரகச் சாராயம் குடித்துக் கொண்டிருந்தவர். என்னைக் குடிகாரன் என்று உன் அம்மாவிடம் சொல்லியிருக்கிறார். அவர்கள் என்னை விரும்பவில்லை. அப்படித்தானே?''

உமா மௌனம் சாதித்தாள். அவனே தொடர்ந்தான்.

''ஆனால் நான் குடித்ததெல்லாம் இரண்டு வருஷத்துக்கு முந்தி. உனக்கு நான் செய்துதந்த சத்தியம் ஞாபகமிருக்கிறதா? அன்றிலிருந்து நான் குடிப்பதேயில்லை. மதுவின் சுவையே எனக்கு மறந்து போய்விட்டது. என்னை உனக்குத் தெரியாதா?''

''ஆனால் கிட்டத்தில் ஒரு நாள் நீங்கள் பாரிலே குடித்ததைக் கண்டதாக அவர் அம்மாவிடம் சொன்னார். அம்மா நம்பிட்டா.''

''மை காட்! நீயும்கூடத்தான் அதை நம்பிவிட்டாய் உமா. அதனால் அவர்கள் எடுத்த முடிவுகளுக்கெல்லாம் மௌனமாயிருந்து சம்மதித்துவிட்டாய். வட் ஹெப்பின்ட்டு யூ? என்மீது நீ வைத்திருந்த நம்பிக்கை எங்கே போயிற்று?''—அவனுடைய தாடை இறுகி குரல் நடுங்கியது.

''ராஜா! நொந்துபோய் இருக்கிற என் நெஞ்சில் குத்தாதீர்கள். என்னால் தாங்க முடியாது.''

''நோ! நோ! உமா நீ என்னைவிட்டு விலகிப்போகிறாய். விலகிவிடத் தீர்மானித்துவிட்டாய் உமா...! நமக்கிடையில் உருவான தொடர்பு வெறுமையாகிப் போகப் போகிறதே என்பதை நினைத்தால் என்னாலும்கூடத்தான் தாங்க முடியாமலிருக்கிறது.'' மீண்டும் அவன் மௌனமாகும் வரை அவள் கேட்டுக்கொண்டிருந்தாள்.

✽ ✽ ✽

அவர்களுடைய கதை பல வருடங்களுக்கு முன்னால் துவங்கியது

உமாராணி!

அவளுடைய சிரிப்பிலேயே மனதின் கபடமற்ற தன்மை புலப்பட்டுவிடும். அவள் குழந்தையாக இருந்த போதே அவளுடன் ராஜா அன்னியோன்னியம். அப்போது அவன் சிறுவன். அந்தப் பராயத்தில் அவளோடு பழகிய நாட்கள்... அவள் செய்த குறும்புகள்... அவனுடைய விஷமங்களுக்கு அவள் வெளிப்படுத்திய சிணுங்கல்கள்... உமாவின் குறும்புத்தனத்தையும், அழகிய கண்களில் தெரிந்த மலர்ச்சியையும் எத்தனை தடவைகள் ரசித்து மகிழ்ந்திருப்பான். நாட்கள் விரைவாக ஓடிவிட்டன. இனிய நினைவுகள் மட்டும் நெஞ்சில் நீங்காதிருக்கும் வண்ணப்பொருட்கள்.

வசந்தகாலம் வஞ்சகமில்லாதது. இருந்தும் உமாவுக்கும் தனக்கும் நடுவில் ஏதோ திரைவிழுந்துவிட்டாற் போன்ற உணர்வை ஏனோ ராஜாவுக்கு ஏற்படுத்தியது. சீரணிக்கவொண்ணு அந்த உணர்வினால் அவன் உள்ளம் தவித்தது. அவனைக் கண்டால் ஓடி ஒளியும்படியாக என்ன வந்தது அவளுக்கு? பார்த்தும் பாராததுபோல அவள் நடந்துகொள்ளும் போது அவன் நெஞ்சில் ஏதோ தைத்தது.

தூக்கம் வராத இரவுகள். ஏக்கத்தால் அவன் சிந்தையைக் குழப்பிக்கொண்டான். அவளுடைய செயலிலே... பார்வையிலே... ஏதோ மாற்றம். நெஞ்சில் எந்தக் கல்மிஷமும் இல்லாமல்தானே அவளோடு பழகினான். ஆனால் ஏன் இப்படி...?

புரிந்துவிட்டது. இள வயதில் ஆற்றுமை உணர்ச்சியில்—பேதமையால் அவனுக்கு உண்டான சலிப்பில், வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் ஆரம்ப கட்டத்திற்கு அவள் வந்துவிட்டாள் என்பதும், பருவம் தந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டதால் ஆண்களைக் கண்டு பயம் கலந்த

## விபுலாநந்தருக்கு இருட்டடிப்பு!

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர் நினைவுதினம் ஜூலை 19ம் தேதி என்பதை இவ்வளவு சீக்கிரத்தில் நம் மக்கள் மறந்துவிட்டார்களா? தமிழுக்கு அளப்பரிய தொண்டு செய்த மூதறிஞர், யாழ்நூல், மதங்க சூளாமணி முதலிய ஒப்பற்ற ஆராய்ச்சி நூல்களை இயற்றிய பெருமகன், எல்லாவற்றுக்கும் மேலாக சுவாமி விவேகாநந்தரை நிகர்த்த புரட்சித் துறவி—ஆத்மீக ஞானி. அத்தகைய ஒரு பெருமகன் நமது காலத்தில் வாழ்ந்தது நாம் செய்த பாக்கியம். அவர் நினைவு வாழ்நாள் முழுவதும் நம்முடன் இருக்கவேண்டும். ஆனால் வருடத்துக்கொருமுறை வரும் அவரது நினைவு தினத்தையே நாம் கோட்டைவிட்டுவிடுகிறோம். இந்த ஆடி 19ம் தேதி நமது தேசியத் தினசரிகளில் வாரமஞ்சரிகளில் சுவாமி விபுலாநந்தரைப்பற்றி ஒரு வார்த்தை இடம்பெறவில்லை. பிரசுரத்திற்கென அனுப்பப்பட்ட கட்டுரை, கவிதைகளும் பிரசுரமாகவில்லை. மாத இதழ்கள்கூட மூச்சு விடவில்லை. ஐயகோ! தமிழினமே!

— மணி.

## ஏழைகள்

இறைவனின் ஆத்திரம்
அதிகரிக்கும்போது
படைக்கப்பட்ட
அருவருப்பான
தெருநாய்கள்...!
உயிர்ப்பிச்சைக்கே
வழியற்று
செல்வந்தப் புயலால்
மோதியடித்துச்
சாறு பிழிந்து
சக்கையாக்கப்படும்
சருகுகள்.....!
ஜனநாயக நாட்டில்
சுதந்திரம் பெறாத
கூண்டுக் கிளிகள்....!
அன்று
இவர்களைப் படைத்த
இறைவன் —
இன்று,
அவர்களின் கண்ணீரைத்
துடைக்க ஒரு வழி
வகுக்க
மறந்த தேனோ...?

—நற்பிட்டிமுனை பளீல்.

பார்வையை வெளிப்படுத்து கிறாள் என்கிற சாதாரண விஷயமும் அவனுக்கு விளங்காமல் போய்விட்டது. நினைத்துக்கொண்டபோது மெதுவாகச் சிரித்தான்.

அவன் இதயத்தின் ஏக்கத்தைப் பிறகும் உமா புரிந்து கொள்ளவில்லை. பெருமூச்சுக்களின் வெம்மையை இன்னும் அவள் உணரவில்லை. கலப்படமற்ற அன்பை எதிர்பார்த்துத் தினமும் அவளைத் தரிசிக்க விரும்பினான். ராஜா தவிப்போடு அவளை நோக்கினான். இதயம் இதயத்தைத் தேடியது. வரைவிலக்கணம் சொல்லத் தெரியாமலிருந்த அவனுடைய இதயதாபம், மூன்று எழுத்துக்களால் பரிணமிக்க வேண்டியது என்பதைக் கண்டுகொண்டான்.

'கா...த...ல்!'

அவளுடைய காதுக்குக் கேட்காத அவனுடைய உள்ளத்து ஓலம் அவனுள்ளேயே எதிரொலித்துக்கொண்டிருந்தது. 'யாரோ ஓர் அந்நியன் போல அவள் என்னை நினைக்கிறாளோ' – நெஞ்சத்தில் ஒரு நெருடலை ஏற்படுத்தும் அவளுடைய பாராமுக நடத்தை! பழைய நாட்கள் அவளின் நினைவில் வரமாட்டாதோ? இந்த ஒருதலைக் காதலின் மூச்சு எதுவரைக்கும்?

ஒரு கடிதம் – பதில் வந்தது. அவளுடைய மன விருப்பம் தெரிந்தபோது ஆரம்ப நாட்களில் தான் பட்ட அவதி அர்த்தமற்றது என்று அவனுக்குத் தெரிந்தது.

கடிதம் - பதில்; காதல் - உறவு கதை வளர்ந்தது.

ஒரு நாள் அவள் அவனிடம் கேட்டாள்: ''ஒரு வாரத்தில் எத்தனை போத்தல் குடிப்பீர்கள்?''

''எட்டு. ஏன் கேட்கிறாய்...? தொகையைக் குறைத்துக்கொள்ள வேண்டுமோ?'' விஷமமாகச் சிரித்துக்கொண்டு அவன் கேட்டான்.

''இந்தக் கெட்ட பழக்கத்தையே விட்டுவிட வேண்டும் என்கிறேன்'' - அவளுக்கு ஆத்திரமான ஆத்திரம். அருமைக் காதலியின் ஆத்திரம் அவனுக்குப் புரிந்தது. சீண்டிப் பார்க்க விரும்பினான்.

''ஐயையோ எனக்கு வேறு எந்தக் கெட்ட பழக்கமும் தெரியாதே உமா!''

''நான் சீரியஸாகப் பேசுகிறேன். இனிமேலும் நீங்கள் ஒரு குடிகாரராக இருக்க நினைத்தால் உங்கள் சகவாசமே எனக்கு வேண்டாம்'' - அவள் வெடித்தாள். அதற்கும் ராஜா ரசித்துக்கொண்டே,

''லுக் ஹியர் உமா. நினைத்த உடனே விட்டு விடுகிற சமாசாரமா அது? ஐ வில் ட்ரை லைப அன்ட் பை'' என்றான்.

''அப்படியென்றால் நான் இனி உங்களோடு எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. முடிந்தால் 'நொன் - ட்ரிங்கர்' ஆன பிறகு சந்தியுங்கள்'' — விடுவிடென அவள் நடந்து மறைந்தாள். ராஜா தனித்து நின்றான்.

'காதலிக்காக ஒரு கெட்ட பழக்கத்தை உதறித் தள்ள முடியாத இவர் வாழ்வதற்கு லாயக்கே இல்லாதவர்' என்று உமா எண்ணினாலும், அவனைக் காணாத தவிப்பில் வைராக்கியந் தடுமாற, கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். கவலை, கண்களைச் சுற்றிக் கருவளையமிட்டுக் கொண்டிருந்த அந்த நாட்களில், ராஜா லைப்ரரி புத்தகங்களுடன் மல்லாடிக்கொண்டிருந்தான். 'குடிப்பழக்கத்தை விடுவது எப்படி?' என்று எழுதப்பட்டிருந்த புத்தகங்கள்! இந்த ஒரு மாதமாக அவன் பார் பக்கம் தலை வைத்தும் படுக்கவில்லை. புலனடக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருந்தால் அவன் ஆகாரம் எடுக்கச் - சற்றுச் சிரமப்பட்டான். முன்பெல்லாம் தண்ணி உள்ளே போனால்தான் சாப்பாடும் இறங்கும். ஷேவ் செய்துகொள்ளவும் மனமின்றி பெரும் பொழுதை லைப்ரரிக்குள் கழித்தான். வென்றான். முப்பத்துமூன்று நாட்களுக்குப் பிறகு உமாவைச் சந்தித்தான். உருகும் உள்ளங்கள் மேலும் இறுக்கம்கொண்டன. அவனை ஆரத்தழுவி உதடு, மூக்கு, கருவளையம் விழுந்த கண்கள், நெற்றி என்று முத்தமாரி பொழிந்தபோது உமா சொன்னாள், ''தாடி தைக்கிறது. ஷேவ் பண்ணிக்கொள்ளுங்கள்.''

✽ ✽ ✽

**க**தை சுவாரசியமாகத் தொடர்ந்தது.

அவன் தொழில்நிமித்தம் வெளியூரில் இருந்தாலும்

வாரமொருமுறை கடற்கரையில் சந்தித்துக்கொள்ளுவார்கள். சந்தோஷமாகக் காலச்சக்கரம் சீராய் இயங்கிக்கொண்டிருந்தபோது, உமாவின் அம்மா மாப்பிள்ளை தேடும் பொறுப்பை, தன் மைத்துனன் – உமாவின் சித்தப்பாவிடம் ஒப்படைத்தாள்.

''என் தங்கச்சியின் மகன் தவராசன் இருக்கிருன். அவனே உமாவைக் கட்டிக் கட்டும்'' என்ருர் அவர்.

''தமிழ் வாத்தியார் அல்லவா அவன்? என் மகளுக்காக நான் வயல் நிலமும், வீடும், நகையும் சீதனமாகக் கொடுப்பேன். வேறு நல்ல இடமாகப் பார்க்கலாமே'' என்று மறித்தாள் அம்மா. ஆசிரியத் தொழிலை உமாவின் அம்மா மட்டம் என்று நினைப்பதாலும், தன் தங்கச்சியின் மகனுக்கு வரவிருக்கும் சீதன வாய்ப்பு நழுவப் போகிறதே என்ற பயத்தினுலும் சித்தப்பாவுக்கு லேசாகக் கோபம்வந்தது.

''அப்போ அவன் ராஜாவையே பண்ணிவையுங்க அண்ணி'' - விட்டேத்தியாகச் சொன்னுர் அவர்.

''சேச்சே! சின்ன வயதிலிருந்தே உமாவும், ராஜாவும் அண்ணன் தங்கச்சி மாதிரி. அவனுக்கா கட்டிக்கொடுக்க?''

''சகோதரர்களா? நாசமாப்போக! அவனை நான் சாராயக்கடையில் கண்டிருக்கிறேனே. ஒளித்து ஒளித்து ரகசியமாய்க் குடிப்பான். அது மட்டுமில்லை. அவனும் உமாவும் லவ்பண்ணுகிருர்களாம். பெரியவர்கள் ஒத்துவராவிட்டால் ஒரு நாளைக்கு உமாவையும் கூட்டிக்கொண்டு ஓடிவிடுவானும். சிநேகிதர்களிடம் சொல்லிக்கொண்டிருந்ததை என் காதால் கேட்டேன்.''

''என்னது புதுக்கதை? பரம்பரையிலேயே இல்லாத புதினம். இதெல்லாம் ஏன் முன்னமே சொல்லவில்லை? நான் அவளிடமே கேட்கிறேன்.''

உமாவிடம் பேசியபோது தாய்க்கு அந்தக் காதல் விவகாரம் தெரிந்தது. காளி வந்து விட்டவள்போல் ஆடினுள். இரட்டை நாடி சரீரம்வேறு. மகளின் தலைமயிரைப் பிடித்து உலுக்கினுள். கன்னத்தில் விழுந்த அறையில் உமா கதிகலங்கிப்போனுள். அம்மாவின் ஆத்திரம் அடங்கப் பல மணியாயிற்று.

உமாவின் தமக்கை கலியாணம் செய்துகொண்டு புது வீட்டுக்குப் போன சில நாட்களுக்கெல்லாம் அப்பா கடவுளிடம் போய்விட்டார். உமாவும் தாயும்தான் ஒன்ருக இருந்தார்கள். தனக்கு நினைவு தெரிந்தபிறகு அம்மா தன்னைக் கை நீட்டி அடித்ததில்லையென்பதும், அன்றைக்கு அப்படி நேர்ந்துவிட்டதேயென்பதும் உமாவின் நெஞ்சை அரித்தன.

அம்மா மகளின் தலையை வருடிவிட்டாள்.

''உமா, நம் குடும்பத்தில் எவருக்கும் இம்மாதிரி எண்ணங்கள் ஏற்பட்டதில்லை. உன் அக்கா எல்லாப் பொறுப்பையும் எங்களிடமே விட்டாள். நாங்கள் பேசி முடித்த கலியாணம். இப்போது சிறு பிணக்குக்கூட இல்லாமல் வாழ்கிருர்கள். உன் புத்தி ஏன் இந்தத் திசைக்கு ஓடிற்று? ஒருவேளை உன் அப்பா போன பிறகு உன்னை நான் சரியாக வளர்க்கவில்லையோ என்று யோசித்துப்பார்க்கிறேன். அப்படி ஓர் இடத்திலும் பிழை இருப்பதாகத் தெரியவில்லை. நன்ருக யோசித்துப்பார் மகளே! உன் பிடிவாதக் குணம் இந்த விஷயத்திலும் தலைதூக்குமா? ராஜா பெரியவனுன பிறகும் நீங்கள் சந்திப்பதை நான் வித்தியாசக் கண்கொண்டு பார்க்கவில்லை, அந்தப் பார்வை எனக்குப் பரிச்சயமில்லை. உன் முன்னேற்றத்துக்கு அவன் எல்லா வகையிலும் தூண்டுகோலாய் இருப்பான் என்றுதான் நினைத்திருந்தேன். அவன் பிடித்திருந்தது தூண்டில்கோல் என்று இப்பத்தான் தெரியுது.''

அம்மா சொல்லச்சொல்ல உமாவின் கண்கள் கலக்கம் கண்டன.

''இதோ பார் உமா, நான் உன்னை இனிமேல் அடிக்கமாட்டேன். சத்தியமாகத் தொடமாட்டேன். ஒரு குடிகாரனைக் கலியாணம் பண்ணிக்கொள்ள உனக்கு எண்ணமிருக்குமானுல், மாலையும் போட்டோவுமாக இருக்கிருரே இந்தத் தெய்வம் – அவரிடம் அனுமதி வாங்கிக் கொள்'' - சுவரில் மாட்டியிருந்த கணவனின் படத்தைக் காட்டினுள். ''ஓடிப் போனவள்'' என்ற பட்டம் உனக்குக் கிடைக்கவேண்டுமானுல் என்னுடைய சவத்தைத் தாண்டிக்கொண்டுதான் ஓடவேண்டியிருக்கும்.

---

அடுத்த இதழ்

## பாரதி நூற்ருண்டுச் சிறப்பிதழாக

வெளிவருகின்றது.

இதழை அலங்கரிக்கவேண்டியது உங்கள் பொறுப்பு.

---

யாருடைய கௌரவத்தையும் சிதைக்காமல் உன் அக்கா இப்ப வாழ்வதுபோல இருக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு இருக்குமானால் இப்பவே உன் அப்பாவுக்கும் எனக்கும் சத்தியம்செய்து தா. நாங்கள் பார்க்கிற மாப்பிள்ளையை கட்டிக்கொள்வதாக''-சிந்திய மூக்கை முந்தானையால் துடைத்து விட்டாள் அம்மா.

மூளை நன்ருகச் சலவை பண்ணப்பட்டுவிட்டதால் உமாவுக்கு வேறு வழி தெரியவில்லை. சத்தியம்செய்து கொடுத்தாள். பொலபொல வென்று உதிர்ந்தன கண்ணீர் மணிகள். 'ராஜாதான் என் கணவர்' என்றிருந்த உறுதி, இப்போது எடுத்துக்கொண்ட சத்தியத்தின்முன்னுல் கரைந்து ஆவியானது.

இருந்தாலும் கௌரவமான முறையில் விஷயத்தைச் சொல்லிவிடுவதற்காகத்தான் கடிதம் எழுதி அவனை வரவழைத்திருந்தாள்.

✽ ✽ ✽

நிலவின் மெர்க்குரி ஒளியில் கடல் தகதகத்தது. கூட்டம் கலைந்துபோய்விட்டது. மணலில் மீந்திருந்தவை - வேர்க்கடலை மூடிகள், ஒரு உமா, ஒரு ராஜா - அவர்களைச் சுமந்துவந்த 'யமஹா'.

''உன் காதலுக்காக என்னுல் குடியையே விட்டுவிட முடிந்தது. ஆனுல் உன்னுல் அம்மாவின் ஆசையைத் தட்ட முடியவில்லை. உண்மையை எடுத்துச்சொல்ல முடியவில்லை. தகுதியில்லாத இடத்தில் ஒரு பெரிய பொக்கிஷத்தை வைத்துவிட்டேன். அதை இழப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு வகையில் பார்த்தால் நான் இழப்பது தான் நியாயம்.''

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.''

''நல்லது; வேதாந்தங்களைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது அறிவீனம். என்னைப் பேசவைப்பது என் பலவீனம். ஓ! என் பலத்தையோ, பலவீனத்தையோ இனி வெளிக்காட்டுவதில் என்ன அர்த்தம் இருக்கப்போகிறது? தவராசனை உன் சித்தப்பா எனக்குப் போட்டியாக நிறுத்துகிருர். நான் போட்டிக்கே வரவில்லை. தவராசன் வென்று விட்டான்.''

''ராஜா! ப்ளீஸ்... என்னேடு அன்பாகப் பேசுங்கள். உங்கள் பேச்சு எனக்கு பயத்தைத் தருகிறது'' - என்ருள் அவள்.

ராஜா வாய்விட்டுச் சிரித்தான். பிறகு, ''உமா, நடக்கப்போகிற உன் கலியாணத்துக்கு நான் வரமாட்டேன். உனக்கும் தபால் செலவு மிச்சம். வருஷக் கணக்கில் நான் காலத்தை விரயம்செய்திருக்கிறேன். பாரேன். நீ சிறு பிரச்சனையும் இல்லாமல் வாழவேண்டும் என்பது உன் அம்மாவின் ஆசீர்வாதம். இதற்குமேல் நான் வாழ்த்த என்ன இருக்கிறது?... அ... வெய்ட் எ மினிட்'' என்றவன், தன் மோட்டார்சைக்கிளை நோக்கி நடந்தான். கேசுக்குள் இருந்த ஒரு சிறிய பெட்டியை எடுத்துக்கொண்டு திரும்பினுன். ஒரு சிறிய கைப்பை, பர்ஸ்போல. அதன் உடம்பில் பத்துக்கும் மேற்பட்ட இரத்தினக்கற்கள் டாலடித்தன.

''உமா! உனக்காகவே நான் வைத்திருந்தது. நமக்குக் கல்யாணம் நடக்கிற போது தரலாமென்றிருந்தேன். பிகுபண்ணுமல் வாங்கிக் கொள்வாயா?'' - அவன் கேட்டான். அவள் கையை நீட்டினுள்; கொடுத்தான். அவளின் நீள விரல்களை ஒருசேரப் பிடித்து புறங்கையில் சின்னதாக ஒரு முத்தம். நடந்து, அலைகள் காலை நனைக்கின்ற இடத்தில் நின்று கண்ணுடி போன்ற சமுத்திரத்தை வெறித்து நோக்கினுன். பின்னுல் உமா வந்து, ''ராஜா! உங்கள் மனதில் விபரீதமான எண்ணங்கள் ஏதும் ஏற்பட மாட்டாது என்று நினைக்கிறேன். ஐ மீன்...'' - என்று தயங்கியவாறு இழுத்தாள்.

''யூ மீன்... ம்... ஓ! அதுவா? - 'ஹோ' வென்று சிரித்தான் அவன்.

''தோல்வி சிலபேரைத் தற்கொலைக்குத் தூண்டுவதுண்டு உமா. ஆனுல் பிரச்சினையின் அடிப்படை விளங்காத கோழைத்தனம் எனக்கு இல்லை. காதல் என்பது வாழ்வின் ஓர் அங்கம்மட்டும்தான். அதுவே வாழ்க்கையாகிவிடாது. கொஞ்ச நாட்களுக்கு எனக்கு இருக்கப்போவது குறைப்பிரசவ உணர்வுதான். அதனுல் நான் தளரமாட்டேன். என்ருவது ஒரு பிரசவம் நிறைவைக் கொடுக்கலாம் அல்லவா? என்னை நானே ஏமாற்றிக் கொள்ளமாட்டேன் புரிகிறதா?''

மணலில் மோட்டார் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்தான் ராஜன். பகலில் கடலிலிருந்து வீசும் காற்று, பொழுதுபட்ட பிறகு தரைக் காற்ருக வீசுகிறது. கண்ணீர் ஓடிய உமாவின் கன்னங்கள் உலர்ந்து கசகசத்தன. ✽

## அஞ்சலி

அண்மையில் காலமான கலையரசு சொர்ணலிங்கம் அவர்களது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அனருக்கு அஞ்சலிசெலுத்துகிறேம்.

— ஆசிரியர்.

# மே மாதச் சிறுகதைகள்

# ஒரு நோக்கு

சிறுகதை பற்றிய ஆலாபனத்தை விட்டு விட்டு நேரே விடயத்துக்கு வருவோம். முதலில் சஞ்சிகைகளில் வந்த கதைகள்.

**சிரித்திரன் –**

'‚பரீதா வெளிநாடு போகிறுள்'' - எஸ். எச். நிஃமத் (முஸ்லிம் பெண் ஒருத்தி வாழ வழியில்லாமல் வெளிநாடு போக முற்படுகிறுள். இது தமது பண்பாட்டுக்கு விரோதமானது என்று அந்த ஊர்ப் பெரிய மனிதர்கள் விசாரணை நடத்துகின்றனர்) விசாரணையில் அந்த ஊர் தனக்கு வாழ்வளிக்கத் தவறியதை தர்க்கரீதியாக எடுத்துக்கூறி அந்தப் பெரிய மனிதர்களை வாயடைக்கச் செய்கிறுள் பரீதா. நல்லதொரு கருத்தைக் கொண்ட இக்கதையில் கலையம்சம் மிகக் குறைவு.

**சுடர் –**

(சித்திரை இதழே மே மாதத்தில் வெளிவந்தது. எனவே இவ்விதழில் வெளிவந்த கதைகளே இங்கு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.)

**(1) போலிப்பூக்கள் - (திக்குவலை கமால்)**

கைப்பணிப் பரீட்சைக்காக எல்லா மாணவிகளும் வீட்டில் அக்கா, அம்மா முதலியோரைக்கொண்டு காகிதப் பூக்கள் செய்து கொண்டுபோக சாந்தினி மட்டும் சொந்தமாக இரண்டு காகிதப்பூக்கள் செய்துகொண்டு போய் 15 புள்ளிகள் பெறுகிறுள். 'பட்டென்று புள்ளிகளைக் கூட்டிப்பார்த்து அப்பாடா என்று அதிர்ந்து போகிறுள்! கதையின் முடிவு என்னவென்று புரிந்துகொள்ள முடியாமல் நாமும் அதிர்ந்து போகிறேம். ஆனல் இது நீர்ப்பாசனத் திணைக்களம் நடாத்திய போட்டியில் 3வது பரிசு பெற்ற கதையாம்.

**(3) இந்தப் பறவைகளுக்குச் சிறகுகள் இல்லை - (தாமரைச் செல்வி)**

யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களிடையே சாகாவரம் பெற்றுவிட்ட சீதனப் பிரச்சினை தான் இக்கதைக்கும் கருப்பொருள். சீதனப் பிரச்சினையால் தங்கைகளுக்குக் கல்யாணம் செய்துவைக்க முடியவில்லை. தங்கைகளுக்குக் கல்யாணம் செய்துவைக்காமல் தெய்வேந்திரன் தன் காதலி நிர்மலாவைக் கைப்பிடிக்க முடியவில்லை. பழைய கருவானலும், புதிய உத்திகள் சில 'சுடரி'ன் பரிசுக் கதையாக இதை ஆக்கிவிட்டது.

**(3) கங்கை வழி - (ஆனந்தி)**

ஆடம்பர வாழ்க்கை நடாத்தும் கல்யாணி ஏழ்மையில் உழலும் அவள்தோழி கங்காவைப் பார்த்து ஏளனம் செய்கிறுள். கல்யாணியின் கணவன் லஞ்சக்குற்றத்திற்காக கைது செய்யப்பட்டபோது, அவள் வாழ்க்கையின் வண்டவாளம் வெளிப்படுகிறது. நல்லதொரு கருத்தைச் சரியாக சிறுகதையில் அமைக்கத் தெரியாமல் குழப்பியிருக்கின்றுர் ஆனந்தி. சிதைந்த உருவம். ''அவள் கூறுகிற அந்தப் புதினத்தையே அறியாதவன்போல அவனும் நிற்கிறுன்'' என்று கதை முடிகிறது. வாசகர்களும் அவ்வாறே.

**மல்லிகை –**

மே மாத இதழில் சிறுகதை எதுவும் வெளிவரவில்லை. இனி வார மஞ்சரிகளில் வெளிவந்த சிறுகதைகளைப் பார்ப்போம்.

**தினகரன் – 2-5-82.**

**''அங்கே சரியும் சம்பிரதாயச் சுவர்கள்''**
**எழுதியவர் யோகா பாலச்சந்திரன்.**

இந்து ஒரு இளம் விதவை. புதுமை நோக்குக் கொண்டவள். வெளிநாட்டில் இருக்கும் அவள் மகன் முகுந்தன் அங்கே தன்னிஷ்டப்படி காதல் திருமணம் செய்து கொண்டு அந்த அதிசயத்தைக் காண்பிப்பதற்காக விடுமுறையின்போது தாயை அங்கே வரும்படி அழைக்கிறுன். ஆனல் இந்துவின் பெற்றேர் அவளை விடுமுறையின்போது ஊருக்கு வரும்

— 'இரா. நா.' —

படி அழைக்கின்றனர். இரு கடிதங்களையும் படித்த இந்துவிற்கு வேருெரு எண்ணம். அவள் தான் காதலிக்கும் இதயராஜ் என்பவரை காதல் மணம் செய்துகொண்டு, விடுமுறையில் தேனிலாவைக் கழிப்பதற்காக இந்தியா செல்ல ஏற்பாடு செய்கிருள். இது எக்கச்சக்கமான புரட்சிதான். சம்பிரதாயச் சுவர்களைச் சரிக்க எண்ணிய யோகா பாலச்சந்திரன் குடியிருக்கும் வீட்டையே சரித்துவிட்டார்போல் தோன்றுகிறது.

**வீரகேசரி** – 2-5-82

"அவன் — அவள் = 0"

எழுதியவர் நவம் அரவிந்தன்.

புதுமையான தலைப்பு. அதைப்போலவே புதுமையான கதை சொல்லும் உத்தி. குடும்பப் பொறுப்புகளை உதறிவிட்டுக் காதலியுடன் ஓடிவிட முனையும் மகன். வயதான தந்தைக்கு அவன் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனல் வீட்டிலுள்ள வயது வந்த மகள் வறுமை முதலிய பிரச்சினைகள் மகனின் காதலைத் தடைசெய்யச் சொல்கிறது. மகனிடம் இதைச் சொல்ல முடியாமல் அவன் காதலிக்கும் பெண்ணிடமே கெஞ்சுகிருர் தந்தை. அவள் நிலைமையைப் புரிந்துகொண்டு காதலனுடன் ஓடிப்போகும் எண்ணத்தைக் கைவிட்டு விடுகிருள். பழைய கதை ஆனுலும் புதுமையான உத்திகளும் நவீன நடையும் சோபிக்கச் செய்கின்றன.

**சிந்தாமணி** – 2-5-82

"நான் ஒரு தத்துவமானேன்"

எழுதியவர் எஸ். ஐ. நாகூர்கனி.

வெளிநாட்டில் உத்தியோகம் தேடிக் கொடுக்கும் ஏஜென்ட் ஒருவரிடம் அப்பாவி இளைஞன் ஒருவன் ஏமாறும் கதை. மனைவியின் நகைகளையெல்லாம் அடகுவைத்து சுளையாக 15,000 ரூபா கொடுத்துவிட்டு, நாளை, மறுநாள், அடுத்தவாரம் என்று அலைந்து திரியும் என்னைப் பார்த்தாவது ஏனைய இளைஞர் திருந்த வேண்டுமென்று கதை முடிகிறது. ஏஜென்டுகளின் தேனெழுகும் வார்த்தைகள் நல்ல படப்பிடிப்பு.

**தினகரன்** – 9-5-82

"நெருஞ்சி முட்கள்"

எழுதியவர் மா. பாலசிங்கம்.

பாடசாலை ஒன்றில் ஒழுங்காக வேலை செய்துவரும் ஆனந்தசிவம் என்ற ஆசிரியரை வெளியேற்ற மறைமுகமான முயற்சிகள் நடைபெறுகின்றன. அப்பாடசாலையில் பணியுரியும் பொன்கிளி ரீச்சர், தன் தம்பியை அங்கு

# தோடுகளும் தொலைவுகளும்!

என் அம்மாவின் தாய்...
எண்பது வயதில் இப்போதும்
பனட்டோடு ஒடியல்
குரக்கன் பிட்டும்
தினை அரிசிச் சோறும்
தினம் சமைத்தே உண்பாள்!
அந்த உடலின் காத்திரம்
எண்பதாயினும் 1981ல்....
எவ்வித மாற்றமும் காணவில்லை!
நண்பகல் சமையல் முடிந்ததும்
கடற்கரைக்கு மாலைதோறும்
நடந்தே செல்வாள்...
கதிரவன் மறையும் வரை
பாட்டியின் காலிரண்டும்
கடற்கரை மணலை
பலதடவை அளந்திருக்கும்...
தெரு விளக்குகள் சிரிக்குமுன்
மாலையென்ற கருங்கன்னி
தெருக்களில் வந்திடுவாள்
அப்போதும் ஆச்சி
ஏதேனும் அச்சமின்றி
கடற்கரையை அளந்துகொள்வாள்
பறந்து செல்லும் கார்களின்
தெறிக்கும் வெளிச்சங்கள்
அவள் காதில் தொங்கும்
சிவத்த கல்லு தோடுகளை
இழுத்து பிடித்து
கடலில் வீழ்த்தும்
அந்நேரம் –
கடலின் தொலைவில்
பாட்டி நடக்கும் காட்சி....
கணவாய் குதிக்கும் நாளில்
திருக்கோணமலைக் கடலில்
சிரிப்போடு விளையாடும்
'குல்லா' முதுகில் தெரியும்
குட்டி குட்டி விளக்குகளாக
கும்மிருட்டில் தெரியும்....
தொலைவுகள் ஓர்நாள்
தோடுகளாக இருப்புகளமைக்கட்டும்.

● ஈழத்து மகேஸ்வரி.

நியமிப்பதற்காகச் செய்த சூழ்ச்சியே இதற்குக் காரணம் என்பது அதிபருக்குத் தெரியவருகிறது. அதிபர் அதை முறியடிக்கிறார். கதையில் கலைநயம் இல்லை. குழப்பமான நடை, ஆனால் பெண்மைக் கவர்ச்சியை உபயோகித்துக் காரியங்களைச் சாதிக்க முயலும் பொன்கிளி ரீச்சர் பாத்திரம் உயிருள்ள பாத்திரமாக அமைந்துள்ளது.

(2) "தீயின் நடுவிலும்" – சிறப்புச் சிறுகதை.

எழுதியவர் செ. நடராசா.

வேலையாள் முருகன் தன் வீட்டில் பல சோகங்களை அனுபவித்து வாழ்க்கை வெறுத்த பின்னரும் எஜமானரின் குழந்தையிடம் கொண்ட ஈடுபாடு காரணமாக அக்குழந்தையைத் தேடி வருகிறான். இக்கதையில் என்ன சிறப்பு இருக்கிறது என்று தெரியவில்லை. முருகன் பாத்திரம்கூட நம்பமுடியாத அதிசய – அபூர்வ பாத்திரமாக உள்ளது.

## வீரகேசரி – 9-5-82

"ஒரு ஆமைக்கதை"

எழுதியவர் வ. அ. இராசரெத்தினம்.

மீனவப்பெண் மார்த்தா சைமன் முதலாளியின் மகனிடம் தன்னை இழந்துவிடுகிறாள். விஷயம் தெரிந்ததும் பெற்றோர் அதிர்ச்சியுறுகின்றனர். ஆமைமுட்டைகளைப் பாதுகாக்க கடுவன் ஆமை வருவதுபோல 'அவரும் என்னைத் தேடி வருவார் அம்மா' என்று மார்த்தா நம்பிக்கை தெரிவிக்கிறாள். ஆனால் அம்மாவோ 'மனிதன் ஆமையைப்போல் இல்லை' என்று முடிக்கிறாள். மிகுதி வாசகர் சிந்தனைக்கு விடப்படுகிறது. நல்ல கரு, அருமையான நடை, காட்சிகளை வேகமாக நகர்த்தும் நவீன நடை. வ. அ. வின் ஆளுமை கதையில் பளிச்சிடுகிறது. மீனவ உவமைகள் மட்டும் வழக்கம்போல் திகட்டும் அளவுக்கு அதிகமாகி விட்டது.

## சிந்தாமணி – 9-5-82

"லட்சியப் போலிகள"

எழுதியவர் வேலாயுதம் விஜயகுமார்.

படித்துப் பட்டம் பெற்ற மனைவி வேண்டுமென்று ஆசைப்பட்ட ரமேஷுக்கு படிப்பறிவில்லாத பெண்ணைக் கட்டிவைக்கிறார்கள். தான் ஏமாற்றப்பட்டதால் இளம் மனைவி சுபாஷினியை விட்டுப் பிரிந்து நைஜீரியா செல்கிறான் ரமேஷ். அங்கே நண்பன் மனோகரனின் புத்திமதியால் மனம் தெளிகிறான். ரமேஷின் மனமாற்றத்திற்கு வலுவான சம்பவம் எதுவும் கதையில் இல்லை. அதனால் படிக்காத மனைவிகள் பெருமை வாசகர் மனதில் பதியவில்லை.

## தினகரன் – 16-5-82

"விலகி ஓடும் மேகங்கள்"

எழுதியவர் 'எழிலோன்'

சர்வகலாசாலை மாணவர்கள் மனதில் ஏற்படும் பருவகாலச் சலனங்கள் கதையில் இடம் பெறுகின்றன. புகழுக்கு அப்பாற்பட்டவள் என்று எண்ணியிருந்தவளை 'இகழுக்கு அப்பாற்பட்டவள்' என்று முடிக்கிறார் கதாசிரியர். கதையின் நோக்கம் புரியவில்லை.

## வீரகேசரி – 16-5-82

"திக்கற்றவர்கள்"

எழுதியவர் புலோலியூர் இரத்தினவேலோன்.

சில இளைஞர்கள் ரியூசனைக் 'கட்' பண்ணிவிட்டுத் தியேட்டர் வாசலில் நின்று அலம்புகிறார்கள். கருவும், உருவும் இல்லாத அலம்பல் இது. இக்கதை 'வீரகேசரி'யில் இடம் பெற்றதுதான் ஆச்சரியம்.

## சிந்தாமணி – 16-5-82

"ஓ அந்த மாலைப்பொழுது"

எழுதியவர் காவலூர் எஸ். ஜெகநாதன்.

கனகலிங்கம், கீதா இருவரும் யாழ்ப்பாணத்துக் காதலர்கள் வழக்கம்போல் தங்கையின் திருமணம் முடியாததால் காதல் ஒத்திப் போடப்படுகிறது. பின் கனகலிங்கம் காதலியைக் கைவிட்டுவேறொருத்தியை மணம் முடித்ததுமல்லாமல் வெளிநாடு போகவும் தீர்மானிக்கிறான். இறுதியில் சமுதாய அமைப்பை உடைக்க வேண்டும் என்று கதை முடிகிறது. நல்ல நகைச்சுவை! ஜெகநாதன் போன்ற நம்பிக்கையுள்ள எழுத்தாளர்களும் இப்படிப் புளித்துப்போன கதைகளை எழுதுவது ஏமாற்றம் தருகிறது.

## தினகரன் – 23-5-82

"சூத்திரங்களுக்கு வெளியே"

எழுதியவர் வல்வை கே. எஸ். துரை.

ஏதோ சீதனப்பிரச்சனை பற்றியது இக்கதை என்று மட்டும் புரிகிறது. அலம்பல் நடையும் குழப்பமான முடிவும் கதையைப் புரிந்து கொள்ளத் தடைக்கற்களாகின்றன. இதுபோன்ற கதைகளைப் படிக்காமலே பிரசுரித்து விடுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**வீரகேசரி** — 23 - 5 - 82

"தாய்மை இன்னும் வற்றவில்லை"

எழுதியவர் த. செல்லக்கண்ணு.

விபசாரியான கமலத்தின் மகள் தவமணி அந்த வாழ்க்கையில் ஈடுபட விரும்பாமல் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறாள். அவளுக்காக வீட்டுக்குள் காத்திருந்த சைமன் முதலாளியிடம் செலவுபோக மீதிப்பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறாள் தாய். என்னே தாய்மை! குழப்பமானநடை, கதையின் மற்றொரு விழுக்காடு.

**சிந்தாமணி** — 23 - 5 - 82

"எச்சில் உறவுகள்"

எழுதியவர் எஸ். எச். நிஸ்மத்.

முதல் மனைவியைக் கைவிட்டு இன்னொருத்தியைக் கைப்பிடித்த கயவன் கதிரேசன். முதல் மனைவி பிள்ளைப்பேற்றுக்காகவும் இரண்டாம் மனைவி கருச்சிதைவு காரணமாகவும் ஒரே சமயத்தில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் படுகின்றனர். முதல் மனைவி பிரசவத்தில் உயிர் விடுகிறாள். இரண்டாவது மனைவி உண்மையறிந்து கதிரேசனைத் துரத்தி விடுகிறாள். கதாசிரியர் கதிரேசனுக்காக அனுதாபப்படுகிறாற் போல் இனி அவன் சென்றொதுங்கும் கதை தான் எதுவோ என்று கேட்கிறார். ஒரு அர்த்த மில்லாத கேள்வி இது. கதையும் அப்படித் தான்.

**வீரகேசரி** — 30 - 5 - 82

"முகமூடி மனிதர்கள்"

எழுதியவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்.

கதைக்கருவை கடைசிப் பந்தியில் அப்பட்டமாகவே தெரிவித்து விடுகிறது கதை. சமுதாயத்தில் சிலபேர் முகமூடிபோட்டுக் கொண்டு மற்றவர்களைப் பார்க்கிறார்கள். முகமூடியைக் கழற்றினால் தங்கள் சுயரூபம் ஏனையவர்களுக்குத் தெரிந்துவிடும் என்ற பயத்தில் முகமூடியைக் கழற்றுவதில்லை. சின்னச்சின்னக் காட்சிகளாக கதையை நகர்த்திச் சென்றுள்ள உத்தி பாராட்டுக்குரியது.

**சிந்தாமணி** — 30 - 5 - 82

"அந்த 402"

எழுதியவர் மல்லிகை சி. குமார்.

பத்திரிகைகளில் முதல் முறையாக எரியும் சமுதாயப் பிரச்சினையை மையமாகக்கொண்டு சூடு ஆறுமுன் வெளிவந்த பிரச்சினைக்கதை இது. மலையக மக்களுக்கு என்று ஒதுக்கப் பட்ட 402 ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சையில் வெளியூரவர்கள் தந்திரமாகப் புகுந்து கொண்ட அநீதியை எதிர்த்து பரீட்சை எழுதிச் சென்ற மாணவர்கள் ஊர்வலம் நடத்தியதாகக் கதை அமைகிறது. கதை முடிவு இயல்பானதாக — எதிர்ப்புப் போராட்டம் நடாத்தும் அளவு சுப்பிரமணி போன்ற அப்பாவி மாணவர்கள் தூண்டப்பட்டுள்ளனர், என்பதை வாசகர் மனதில் பதிக்கும்படி அமைந்துள்ளது. நல்ல கதை.

**தினகரன்** — 30 - 5 - 82

"ஆளுமைகள் அழிகின்றன"

எழுதியவர் குறமகள்.

பணக்கார வீட்டில திருமணம் செய்து கொண்ட பரதன் என்ற துடிப்பான இளைஞனின் ஆளுமை பறிபோவதை அழகாகச் சித்தரிக்கும் மனோதத்துவக் கதை. அநேக படித்த இளைஞர்கட்குக் கண்திறப்பாகவும் இது அமையும். நீண்ட காலத்திற்குப்பின் எழுதினாலும் குறமகள் தமது முத்திரையைப் பதித்த முதிர்ச்சியான கதை இது.

நாம் இங்கு விமர்சனத்துக்கு எடுத்துக் கொண்ட 19 கதைகளில் பிரச்சினைக்கதை என்ற வகையில் மல்லிகை சி. குமார் எழுதிய "அந்த 402" என்ற கதையும், புதுமைப் பாணியில் அமைந்த கதை என்பதால், நவம் அரவிந்தன் எழுதிய அவன் — அவள் = O என்ற கதையும், உளச்சிக்கல் பற்றிய கதை என்ற வகையில் 'குறமகள்' எழுதிய "ஆளுமைகள் அழிகின்றன" என்ற கதையும் முதன்மையாக நிற்கின்றன.

ஆழமும் அழகும் நிரம்பிய நடையால் வ. அ. இராசரெத்தினம் எழுதிய 'ஒரு ஆமைக்கதை'யும் நெஞ்சில் நிலைத்து நிற்கிறது.

## விபுலாநந்தரா ? விபுலானந்தரா ?

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர் பெயரை எப்படி எழுதவேண்டும்? விபுலா + நந்தரா? அல்லது விபுல + ஆனந்தரா? எந்த 'ன' அல்லது 'ந' போட வேண்டும். பெரும்பான்மையோர் 'ன' எழுத்தை உபயோகித்து விபுலானந்தர் என்று எழுதுகின்றனர். காரணம் 'ந' எழுத்து ஒரு சொல்லின் இடையில் வர முடியாது என்பது. ஆனால் உண்மையில், சுவாமி விபுலாநந்தரே 'ந' எழுத்தை உபயோகித்து 'விபுலாநந்தர்' என்றே எழுதிவந்துள்ளார். ஆகவே 'விபுலாநந்தர்' என்று எழுதுவதே சரியானதாகும்.

— ரீ. பா.

# ஒரு சலனம் ஒரு மரணம்

சிறுகதை

- இந்திராணி தாமோதரம்பிள்ளை -

பறை மேளம் உரத்து ஒலிக்கின்றது. இனிய காலை வேளையின் மென்மையைக் குலைப்பதுபோல் நாரார்சமாக அப்பிராந்தியமெங்கும் வியாபித்துக்கொண்டிருக்கும் அதிர்வுகள்.

'கோமளம்' செத்துப் போய்விட்டாள். நேற்றுவரை நிஜமாக இருந்த ஒன்று இன்று நிழலாகிவிட்ட நிலையில் அவள் என்றவொன்று அதுவாகிவிட்டது. தலைமாட்டிலும் கால்மாட்டிலும் ஒளி உமிழும் குத்துவிளக்குகள்... கற்றையாக எரிந்துகொண்டிருந்த ஊதுபத்திகள்... புத்தம்புது கூறைச்சேலையில், மஞ்சள் கருக்கழியாத மேனியுடன் நிம்மதியாய், நிரந்தரமாய் அவள் தூங்கிக்கொண்டிருக்கிறாள்.

''என்ர ராசாத்தீ..., அநியாயமா இந்த வயசில செத்துப்போனியே... பெத்த வயிறுபத்தி எரியுதுடீயம்மா..." பெற்றவள் தலையிலடித்துக் கொண்டு கதறுகிறாள். பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட, பிரதிபலன் கருதாத தாய்மை இதயத்தின் அக்கினிக் கொதிப்பு, அவள் சொல்கின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் பிரதிபலிக்கின்றது.

''நீ நடக்கிற இடங்களில புல்லுச் சாகாதே மகளே... மனிசன் எவரையுமே தலை நிமிர்ந்து பார்க்கமாட்டாயே மகளே... அப்படிப்பட்ட நீ... ஏனம்மா இந்த முடிவெடுத்தாய்...?'' கட்டில் சட்டத்தில் முகம் புதைத்து ஒப்பாரி வைக்கும் அந்தப் பருத்த உருவம்தான் பொன்னுச்சி. அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தைப் பொறுத்தவரை அவள்தான் வக்கீல், அவள்தான் வைத்தியர், அவள்தான் தரகர். எந்தச் சொல் அம்பலம் ஏருவிட்டாலும் அவளது சொற்கள் அம்பலம் ஏறும். யாரையும் ஒரே பார்வையில் அளந்து, அவர்களது வரலாறு கண்டுவிடும் அவள்கூட அழுகிறாள்.

''என்ரை வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க வந்த மகராசி என்றல்லோ உன்னை நினைச்சன் அம்மா... நீ வேளைக்கே சொல்லாமல் கொள்ளாமல் போட்டியே...'' பிணமாகிப் போனவளை மருமகளாய் பெற்று அவள் பணிசெய்யு முன்னே இழந்துவிட்ட மாமியாரின் பரிதாபகரமான ஓலம்[illegible]. இத்தனை ஆர்ப்பாட்டங்களிடையேயும் அசையாத சிலையாக நிலைப்படியில் சாய்ந்து நின்றிருந்தான் அவன்...

அவன்தான், அவளை மாலை சூடித் தனக்கே உரியவளாய் வரித்துக்கொண்டவன். ஆண்கள் அழக்கூடாது என்பதாலோ என்னவோ உதட்டைக் கடித்துப் பொங்கி வரும் அழுகையைத் தனக்குள் அடக்கிக்கொள்கிறான். ஆனால் விழிக்கடையில் உருண்டு ஓடிய நீர் முத்துக்களை மறைக்கமுடியாத தோல்வியின் விளைவாய் அவை நெஞ்சில் உருண்டு புள்ளிக் கோலங்களைத் தீட்டுகின்றன. அவனோடு பேசியவள், சிரித்தவள், அன்புக் கோடுகளை வரைந்து காட்டியவள் பெயரிழந்து பிணமாகச் சரிந்து கிடக்கிறாள். ''அத்தான்'' என்று அன்புபொங்க அழைக்கும் வாய் இனிப் பேசாது. நிதர்சனமான உண்மையைக் கண்கூடாகக் கண்டபின்னும்கூட கோமளம் செத்துவிட்டாள் என அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''கோமளா! கோமளா!! நீ உண்மையாகவே செத்துப் போய்விட்டாயா...? என் கோமு... 'என்றுமே உங்களோட இணையா நடப்பேன்' என நீ சொன்ன வார்த்தைகள் எல்லாமே வெறும் பொய்கள் தானா கோமு...? உன் இழப்பை நான்... நான் எப்படித் தாங்கிக்கொள்வேன்? அவனது ஆத்மாவின் கதறல் அவனுக்கே கேட்கின்றது.

அவளை முதன்முதலாகச் சந்தித்த நாளை நினைத்துப் பார்க்கிறான். மற்றையப் பெண்களுடன் பேசாமல் பஸ் ஹோல்ட்டில் நின்ற அவளது எளிமையான கோலம், உலக விஷயங்களை எல்லாம் அரட்டை அடித்துத் தீர்க்கும் பெண்களின் நடுவே குனிந்து நின்ற காட்சி, நேரத்தின் நகர்வினோடு பஸ் வராமையால் சரியான நேரத்தை அவனிடம் கேட்பதா விடுவதா எனத் தடுமாறி நின்ற வேளை... எல்லாமாகச் சேர்ந்து ஓர் மதிப்பை அவ

னுள்ளத்தில் ஊட்டுகிறது. தொடர்ந்துவந்த நாட்களில் தனித்தும் பெண்களுடனும் அவளைச் சந்தித்து முடிவில் ஒருநாள் அவனுள் எழுந்த எண்ணங்களின் எழுச்சியில் கேட்டேவிடுகிறுன்.

''நீங்கள்... எந்த ஸ்கூல்ல படிக்கிறீங்கள்...?''

அவள் சிந்தனை ரேகைகள் வளைந்தோடும் முகத்தோடு நிமிர்ந்துபார்த்துவிட்டு குனிந்துகொள்கிறுள்.

''மகா வித்தியாலயத்தில தான்... சோதினை எடுத்திட்டன். முடிவு வரும் வரை...''

''ஓ!'' அவன் புரிந்துகொண்டவனுய், ''உங்களின்ர அப்பு, அம்மா எல்லாருமே இங்கதானே இருக்கிறுங்கள்?'' எனவும் கேட்டு வைக்கிறுன். நாகரீக யுகத்தில் நிதானமாக நடக்கின்ற நங்கையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் வார்த்தைகளில் தேங்கிக் கிடக்கிறது.

''கந்தப்பு மாஸ்டர்தான் எங்கடை அப்பா...''

''கந்தப்பு மாஸ்டரே... என்னை அவர் சின்ன வகுப்புகளில படிப்பிச்சவர்...''

எதையும் அளவாக நிதானமாகப் பேசும் அவளது தனித்துவமான சுபாவம் அவனைக் கவர்கின்றது. கந்தப்பு மாஸ்டரின் கண்ணியமும் கட்டுப்பாடும் அவரது செல்வியிலும் செறிந்திருந்தது என்பதை கண்கூடாகக் கண்டு கொண்டபோது அவளைப் பற்றிய பசிய நினைவுகள் மெல்லமெல்ல இதய ஆழத்தில் பதிவதை அவன் உணர்கிறுன்.

அம்மா திருமணப் பேச்சை எடுக்கின்றபோது, அவன்முன் கோமளம் நிழலாடுகின்றுள். 'ஏன், அவளை மணந்துகொண்டால் என்ன?' அவனுள்ளே எழுந்த வினைக்கள்... முடிவு... அம்மாவிடம் ஒருநாள் சொல்லி விடுகிறுன். ''கந்தப்பு மாஸ்டரின்ர மகளே...? அந்த வீட்டில நண்டும் சிண்டுமா நாலஞ்சு பிள்ளைகள். உன்ர படிப்புக்கும் வேலைக்கும் அவள் சரிப்பட்டுவருவாளே?''

ஆனல் அவனது பிடிவாதம் வென்றுவிடுகிறது.

சட்டப்படி அவளைத் தன்னுடையவள் ஆக்கிக் கொண்டபோது ஏதோ ஒரு நிறைவு. மாலைவேளைகளில் அவளோடு பேசுவதிலேயே கழியும் இனிய பொழுதுகள்.

''ஏன் கோமு... இப்ப கூட நீர் என்னை நிமிர்ந்து பார்த்துக் கதைக்கிறதில்லை?'' கன்னங்களில் செம்மை பொங்க முகத்தை நிமிர்த்தினுலும்கூட, இமைகள் நாணக் கனத்தினுல் குடையெனக் குவியும்.

''உங்களுக்கு எப்பவுமே பகிடிதான்...'' மெல்லிய சிணுங்கலாக வெளிப்படும் வார்த்தைகள். அவன் இதயம் மெல்ல வலிக்கிறது. 'அவள் இப்படி முடிவைத் தேடிக்கொண்டதற்கு தான் காரணமா?' அவன் தன்னையே கேட்டுப்பார்க்கிறுன்.

நடந்து முடிந்த சில சம்பவங்கள் நிழற்கோடுகளாய் நெஞ்சில் வந்து மறைகின்றன. திருமணத்திற்கு இரண்டு நாட்களே இருக்கின்றன. வேலைக்களைப்பில் உள் அறையில் கதிரை ஒன்றில் கண்களை மூடிக்கொண்டு சாய்ந்திருக்கிறுன்.

கூடத்தில் பொன்னுச்சியும் இன்னும் சிலரும் பேசிக்கொள்வது துல்லியமாக அவனுக்குக் கேட்கின்றது.

''போயும் போயும்... கந்தப்புவின்ர மகளைக் கட்டப் போறுனமே...? தெரிஞ்சும் சேத்தில காலை வைக்கிறது தான்...'' பொன்னுச்சியின் வார்த்தைகள் 'சுளீர்' என நெஞ்சில் மோதுகின்றன. 'சேற்றில் காலை வைத்து விட்டேனு?' அவன் தனக்குள்ளேயே முணுமுணுக்கிறுன்.

''அவளின்ரை நடத்தையும் கொஞ்சம் அப்படித்தான். கொஞ்சக் கொஞ்ச நாளைக்கு ஒவ்வொருத்தனுக்குக் கடதாசி குடுக்கிறதும், அவனோடை இவனோடை சுத்துறதும்... எப்பிடியோ கடைசியில நல்ல ஒருவனைப் பிடிச்சிட்டாள்.''

அவன் இதயம் மெல்ல மெல்லச் சூடேறுகிறது. 'கோமு... நீ அம்மன் கோயில் கருப்பக்கிரகத்தின் புனிதமான சிலை என்று நினைத்திருந்தேனே! வெறும் கல்தானு?' அவன் அந்தராத்மா பதறுகின்றது.

''அதோட அவளின்ர குணங்களும் கொஞ்சம் அப்பிடித்தான்... என்னவோ பெடியனைக் கடவுள்தான் காப்பாத்தவேணும்...!'' பொன்னுச்சி நீண்ட பெருமூச்சோடு நிறுத்துகிறுள். அவன் சிலையாகச் சமைந்திருக்கிறுன். திருமணம் முடிந்துவிட்டது. முதல் இரவு, புனிதமான உணர்வுகளின் சங்கமத்தில் கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் உணர்ந்துகொள்ளும் திருநாள். ஆனல் அவனுக்கோ அவளைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கின்றது.

''எனக்கு தலையை வலிக்கிறது...'' அவன் சுவர்ப்புறம் முகத்தைத் திருப்பிக்கொண்டு படுத்திருக்கிறுன்.

''விக்ஸ் பூசிவிடட்டுமா?'' கனிவாக ஒலித்த அவளது குரலை நாராசமாக உணர்கின்றுன் அவன்.

"வேண்டாம். அது சரியாப் போகும்..."

ஊமையான நாடகத்தை இருபத்திரண்டு மணித்தியாலங்கள் விழுங்குகின்றன. இரண்டாம் நாள் அவனைப் பெற்றவள் வாசலில் நின்று ஓலமிடுகிறாள்.

"என்ரை மகனை நல்லா மடுத்துப்போட்டியள்... அவனோடை இவனோடை சுத்தித் திரிஞ்சத மறைக்க என்ர மகன் தானா கிடைச்சான்...? படிச்சுப் படிச்சுச் சொன்னன். கேட்டானே...? இப்ப ஊர் சிரிக்குது... பெண் கிடைக்காமல் நடத்த கெட்டவளக் கட்டிற்றான் என்று..."

வாத்தியார் மனைவி திகைத்துப்போய் நிற்கிறாள்.

"மாமி... நீங்கள் என்ன பேசுறீங்கள்? நானே அப்பிடித் திரிஞ்சனான்?" விம்மலோடு புறப்பட்டன கோமதியின் வார்த்தைகள்.

"நானே சொல்லுறன்... ஊர் சொல்லுது... நாலு பேர் கதைக்கேக்கை என்ரை மனம் என்ன பாடுபடும் என்று நினைச்சியே?" நிஷ்டூரமாகத் தாக்கும் வார்த்தைகள்.

"ஐயோ மாமி! அளந்து பேசுங்க..."

"ஓம் இப்ப அப்பிடித் தானடீ நீ சொல்லுவாய்... மகன் இது உனக்குச் சரிப்பட்டு வராது... இத்தனை பேர் சொல்லேக்கை அதிலை பிழையிராது... இந்தக் கலியாணத்தை அழிக்கக் கோடே இல்ல... வெளிக்கிடு..."

அவன் வெறுப்பான பார்வையொன்றை அவள்மீது வீசுகிறான்.

"அத்தான்! மாமி சொல்லுறதப் பாத்தீங்களே. ஏன் பேசாமல் நிக்கிறீங்கள்?" தன்னை உணர்ந்துகொண்டவன் அவன் ஒருவன்தான் என்றமுறையில் கடைசி மனு.

"எனக்கென்ன தெரியும்? நாலுபேர் சொல்லும்போது நம்பத்தானே வேண்டிக்கிடக்குது... இது முன்னமே தெரிஞ்சிருந்தா எப்பவோ தலை முழுகிவிட்டிருப்பன்..."

அவள் இதனை எதிர்பார்க்கவில்லை. கடைசி மனுவும் நிராகரிக்கப்பட்டுவிட்ட நிலையில், "அத்தான்... நீங்களுமா?" என்று அழுது கொண்டே அறையினுள் ஓடி விடுகிறாள். அன்று மாலை கோர்ட்டின் படியேறி அவள் பெற்றுக்கொள்ளவிருந்த விடுதலையை அவளே வழங்கி விட்டாள்.

"கோமளமக்கா கிணத்துக்குள்ளே பாஞ்சிட்டா" அவன் அங்கு வருமுன் எல்லாம் முடிந்துவிட்டது. கோமளம் பெயர் நீங்கிப் பிணமாகக் கிடந்தாள். அப்போதுகூட அந்த முகத்தின் சாந்தம் மறையவே இல்லை. "இவள் நடத்தை கெட்டவளா?" அவன் முணுமுணுக்கிறான்.

அவள் அவனிடம் கொடுக்கச்சொன்ன கடிதம் அவள் உள்ளத்தைப் படம் பிடித்துக்காட்டுகின்றது.

"நன்றாக வாழ்ந்தால் சில்ருக்குப் பிடிக்காது... அதற்காக தம் மனம்போன போக்கிலே எதையாவது சித்தரித்துக் கதைப்பது இந்த ஊரில் ஊறிப்போன வழக்கம். 'கதைகட்ட ஒருவன் பிறந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம் உண்டு' என்பது போல் கதைகட்டுவதையே பொழுதுபோக்

Donated By

GANESHAN STORES

13, CENTRAL ROAD,
BATTICALOA.

காகக் கொண்ட சிலரது கதைகளை நம்பி... இத்தனை நாட்கள் உங்களுடன் மனதால், எண்ணங்களால் இணைந்து வாழ்ந்தவளைத் துச்சமாக... மிகமிகக் கேவலமாகக் கணித்துவிட்டீர்கள்... கவரிமான் ஒரு மயிர் உதிர்ந்தாலும் வாழாது... நான் பகிரங்கமாக அவமானப்படுத்தப் பட்டபின் எப்படி வாழ்வேன்? நிரந்தரமாகப் போகிறேன்... என் தூய்மையைக் காலங் காட்டும்.''

உங்கள் மனைவி,
**கோமு.**

''கோமு!...'' அவன் அழுகிறான். உயிரோடு, உணர்வோடு அவள் கரங்களைக்கூடத் தொடத் தயங்கியவன், இன்று செத்துவிட்டபின் கட்டிப் பிடித்துக் கதறுகிறான்.

கோமளத்தைப் பற்றிக் கதைகட்டிய அதே வாய்கள், இதோ, அவள் தூய்மையை, பெருமையைச் சொல்லி ஒப்பாரி வைக்கின்றன.

அவன்கூட இத்தனை படித்தும் எத்தனை சிறுமையாக நடந்துகொண்டு விட்டான். ஊராரின் கதைகளை ஆராய்ந்துபாராமல், தீர விசாரிக்காமல் அவன் எடுத்த முடிவு, அவன் கொட்டிவிட்ட வார்த்தைகள் ஒரு உத்தமியின் உயிரைக் குடித்து விட்டன.

''கோமளம் செத்துப் போய்விட்டாள்.''

ஊராரின் வார்த்தைகள் அவளைக் கொன்றுவிட்டன. இப்படிப்பட்ட வார்த்தைகளால் எத்தனையோ கோமளங்கள் இந்தச் சமூகத்தில் கசங்கி அழிந்துகொண்டே தான் இருக்கின்றன. படித்தும் புத்தியில்லாத பலர் இருக்கும்வரை, சிறிய சலனங்களால் நிலைகுலைந்துவிடும் நெஞ்சங்கள் உள்ளவரை இந்த அவலம் என்றும் மாறாது.

பறை மேளம் ஒலிக்கிறது.

''உனக்குப் பழிசொன்ன வாயெல்லாம் புழுத்துப் போகுமே.. நீ ஒருவரையும் தலைநிமிர்ந்து பார்க்காத உத்தமியல்லோ ராசாத்தீ...'' பொன்னுச்சியின் ஒப்பாரி ஓலம் அவனது செவிகளில் புகுந்து நெஞ்சத்தை வருடுகிறது.

''எனக்கு விளங்கிப் போச்சுது... கோமு...'' அவன் விம்மி வெடிக்கிறான். ஆனால்... கேட்க யாருமே இல்லை.

(யாவும் கற்பனையே)

---

## வீரர்கள் !

நாங்களும்,
ஒருவகையில் வீரர்கள் தான் !
வறுமை யென்னும் அரக்கனோடு
தினமும் போராடிப் போராடி
எங்கள் உயிரைக் காப்பாற்றும்,
வீரர்கள் !

## ஏக்கம் !

நாங்கள்
கலியாணச் சந்தையிலே மதிப்பிழந்த
விலைபோகாத சரக்குகள் !
ஆலயத்தில் அர்ச்சிக்கப்படாத
தாழம்பூக்கள் ?
தனம் கொண்ட கொடியவர்களின்
கழுகுப் பார்வைக்குத் தென்படும்
அழகு தேவதைகள் !
என்றோ, ஒருநாள், . . . . .
சீதனம் என்னும் விலங்கொடிந்தால்,
எங்கள் கழுத்துக்களும்
மணமாலை சுமக்கும் !

- அ. கௌரிதாசன்.

நவநாகரீகத் தேவைகளை மட்டுநகரில் பெறுவதற்கு
ஒரு நவீன ஸ்தாபனம்

# சறன்வ ஏஜன்சீஸ்

—★—

KAWASAKI MOTOR CYCLES,
PAINTS,
TELEVISIONS,
OUTBOARD MOTORS
(Spares & Repairs)
AGRO CHEMICALS
PETROLEUM PRODUCTS

# L. K. SELVANAYAGAM

182, Trinco Road, Batticaloa (Tele: 065–2323)
276, Trinco Road, Batticaloa (Tele: 065–2335)
50, Main Street, Kalmunai (Tele: 067–2150)

அன்பளிப்பு

★

★

ஆ. இராஜேந்திரன்

தாரன் கட்டிடம்

தாயா மோட்டோர்ஸ்

யானை மார்க் குளிர்பான ஸ்தாபனம்

276/A, திருமலை வீதி, மட்டக்களப்பு.

0760/2

ஈழத்துப் படைப்பாளிகளுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு
சுன்னாகம்
ERLALAI WEST
CHUNNAKAM

# "நவீனம்" அளிக்கும் நல்விருந்து!!

"ஈழத்து படைப்பாளிகள் அனைவருக்கும் வணக்கம்! 'நவீனம்' எனும் எமது மாத இதழ், 'வெளிநாட்டு சிறப்பிதழ்' ஒன்றை வெளியிட முடிவு செய்துள்ளது. எனவே உங்கள் எண்ணங்களை — எதிர்பார்ப்புகளை — வேதனைகளை — ஆர்வங்களை படைப்புகளாக்கி, எங்கள் சிறப்பிதழ் பணிகளுக்கு ஊக்கமளியுங்கள்.

பிரதிகள் தேவைப்படும் நண்பர்கள், தனிப்பிரதி விலையான ரூபா 5/– ஐ (ஈழத்து மதிப்பு) தாமதமின்றி,

**"திரு. எஸ். உமாகாந்தன்,**
அஞ்சலகம்,
யாழ்ப்பாணம்"

என்ற முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள். இலக்கிய ஆர்வலர்கள் நன்கொடைகள் அனுப்பியும் உதவலாம்.

படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை 25 – 8 – 1982க்கு முன் கீழே காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**ச. துரைமுருகானந்தம்,**
ஆசிரியர், "நவீனம்" மாத இதழ்,
118, பழைய அஞ்சலகத் தெரு,
மானுமதுரை – 623606,
முகவை மாவட்டம்,
தமிழ்நாடு.

இப்பத்திரிகை, தாரகை கலை இலக்கிய வட்டத்தினருக்காக 21/4, பாத்திமாகிரி வீதி, மட்டக்களப்பில் வசிக்கும் கண. மகேஸ்வரன் என்பவரால், கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.